பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள்

மகாகவி சுப்பிரமணியபாரதியார் அறக்கட்டளை

திருவள்ளுவராண்டு 2033, மாசி - மார்ச்சு 7-3-2002

ஆசிரியர்

சேக்கிழார் அடிப்பொடி

டாக்டர் தி.ந. இராமச்சந்திரன், டி.லிட், (யாழ்.)

இயக்குநர், அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள்

(அறக்கட்டளைச் சொற்பொழிவு நூல்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அறக்கட்டளை

திருவள்ளுவராண்டு 2033, மாசி - மார்ச்சு 7-3-2002

ஆசிரியர்

சேக்கிழார் அடிப்பொடி

டாக்டர் தி.ந. இராமச்சந்திரன், டி.லிட், (யாழ்.)

இயக்குநர், அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-295-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 235

திருவள்ளுவராண்டு 2033 மாசி - மார்ச்சு 2002

நூல்	:	பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள்
ஆசிரியர்	:	தி. ந. இராமச்சந்திரன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	(6 + 42) = 48
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரு. 20 · 00
படிகள்	:	500
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
இலக்கியத்துறை

28.2.2002

முன்னுரை

தமிழக அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ள பாரதி அறக்கட்டளை வருவாயிலிருந்து நிகழ்த்தப்பெற்ற பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவில் 7.3.2002 அன்று காலை பாரதி: எதிர்கால ஆய்வுகள் என்னும் தலைப்பில், சேக்கிழார் அடிப்பொடி டாக்டர் தி.ந. இராமச்சந்திரன் அவர்கள் இப்பொழிவை நிகழ்த்தவும், இப்பொழிவு நூல் 7.3.2002 அன்று காலையே வெளியிடப் பெறவும் தமிழ் இலக்கியத்துறை ஏற்பாடு செய்தது. அவ்வேற்பாட்டின்படி இன்று இப்பொழிவாகக் கேட்கின்றீர்கள்; நூலைக் காண்கின்றீர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் டி.லிட். பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்ற நம் சேக்கிழாரடிப்பொடி டாக்டர் தி.ந. இராமச்சந்திரன் அவர்கள் சைவசித்தாந்த நெறியை உலகெங்கும் பரப்பிவரும் அறிவார்ந்த பேராய்வாளர்; சைவத்தமிழைப் பலர்க்கும் கற்பிக்கவும், ஈடுபாடு உண்டாகச் செய்யவும் முனைந்து தொண்டு செய்யும் பேராசான். அவர்கள் மகாகவி பாரதியாரின் படைப்புகளை ஆழமாக ஆய்ந்தும், தோய்ந்தும், மொழிபெயர்த்தும் பயன்மிக்க பணி செய்பவர். அவர்களின் பொழிவாக அமைந்த மகாகவி பாரதி : எதிர்கால ஆய்வுகள் என்ற இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப்பெறுகின்றது. பாரதி ஆய்வில் ஈடுபட்டோருக்கு இந்நூல் மிகவும் பயன்படும். இந்நூலை அச்சுருக் கொணரப் பணி செய்த அனைவருக்கும் நன்றி உரியது.

தஞ்சாவூர்
28.02.2002

கு.வெ. பாலசுப்பிரமணியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	பாரதி ஆய்வுகள் - இதுவரை	*1*
2.	பாரதி படைப்புகள் பற்றிய எதிர்கால ஆய்வுகள்	*12*
3.	பாரதி வாழ்க்கை பற்றிய எதிர்கால ஆய்வுகள்	*27*

1. பாரதி ஆய்வுகள் - இதுவரை

மகாகவி பாரதியாரின் குயில்பாட்டை மொழிபெயர்த்துக் குறிப்புரைகளோடும், இலக்கிய ஒப்புமைகளோடும் 1980-இல் வெளியிட்டேன். அதில் ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தேன்: "Bharati is a virat - Purusha, Dare not measure him with your little finger" (பாரதி ஒரு விராட் புருஷர்: அவரை உங்கள் சிறு விரலால் அளந்து காட்டத் துணியாதீர்கள்). இவ்வெச்சரிக்கை எனக்கு நானே வழங்கியதுதான்.

பதினாறு கலைகள் நிரம்பிய பூர்ண சந்திரன் நம் மகாகவி. அதில் ஒரு கலையாகிய அரசியலே பெரிதும் எல்லோருக்கும் பேச்சுப் பொருளாக அமைந்திருக்கிறது. பிற கலைகளில் ஒரு சிலவே ஒருசிலரால் ஓதி வாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பாரதி ஆய்வுகள் குறித்த இவ்வுரை குறுகிய காலத்தில் சமைக்கப்பட்டிருக்கிறது. பலரும் இணைந்து பல மாதங்கள் செயல்பட்டுப் படைக்கப்பட வேண்டிய ஆய்வைத் தனியொருவனாகக் குறுகிய காலத்தில் சமைக்கமுற்படுவது சிறப்பாகாது. எனினும் என் கடமையைச் செய்ய முன்றுள்ளேன். இவ்வாய்விற்குப் பயன்பட்ட நூல்களில் பெரும்பாலானவை என் நூலகத்தில் உள்ளன. சில நூல்களை நண்பர் இரா. சுப்பராயலு, நன்கு பராமரிக்கப்பட்ட தம்முடைய நூலகத்திலிருந்து தந்து உதவியதோடல்லாமல் என் பக்கத்திலே இருந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் உதவியிருக்கிறார்.

பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழரிடையே ஓர் எழுச்சி விளைந்தது. பலப்பல நூல்கள் மகாகவியைப் பற்றியும் அவருடைய படைப்புகளைப் பற்றியும் வெளிவந்தன. இவற்றில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஐம்பது விழுக்காடு நூல்கள் நல்ல முறையில் அமையவில்லை. அப்போது நாட்டிலே நிலவியது ஒருவகைப் பரவசக் குழப்பமே.

பாரதி ஆய்வின் முன்னோடி ரா. அ. பத்மநாபன் அவர்களாவார். பின்னாளில் சீனி. விசுவநாதன், பெ.சு. மணி போன்றோர் ஆய்வுகளும் பலப்பல புதுச் செய்திகளை நமக்கு வழங்கின. இவ்வாய்வாளருள் சீனி. விசுவநாதன் அவர்களே பாரதியாரின் முழுநேர ஊழியர் என்பது என் கருத்து, சிற்சில சமயம் இதந்தரு மனையின் நீங்கி, இடர்கள் பல உற்று, அவர் பாடுபட்ட நிலையில், அவருக்கு ஞான ஆசிரியராக அமைந்து, சீனியாருக்கு அவ்வப்பொழுதும் ஊக்கம் அளித்து வந்தவர் மகாகவியின் இளவலான விசுவநாத ஐயர் அவர்களே. ஐயரையே மகாகவியின் நூல்களின் பாதுகாவலர் என்ற எண்ணல் வேண்டும். மிகவும் முயன்று, பலப்பல செய்திகளின் ஆதாரமாக விளங்கிய மகான் அவர்.

பாரதியின் நூல்களுக்குப் பர்மா அரசாங்கம் தடை விதித்ததை ஒட்டித் தமிழ் நாட்டிலும் தடை விதிக்கப்பட்டது. தடை உத்தரவைப் பிறப்பித்தவர் பின்னாளில் காங்கிரஸ் அமைச்சராக விளங்கிய பி.சுப்பராயன் அவர்கள். இதைக்கண்டு கொதித்தெழுந்த சத்தியமூர்த்தி, அவையே கிடுகிடுக்கும்படி பேசிய ஆங்கிலப் பேச்சுக்கள் பொன் எழுத்தில் பொறிக்கத்தக்கன. இதுவரையில் செய்திகளைச் சேகரம் செய்து முதன்முதலில் வெளியிட்ட நிறுவனம் கல்கத்தா தமிழ்ச் சங்கம்.

தமிழ்நாட்டில் பாரதியாரைப் பலரும் போற்றினர். என்றாலும், அவர் பெருமையை மக்கள் உணருமாறு செய்யக் குறிப்பிடத்தக்க சங்கம் எதுவும் தமிழ்நாட்டில் தோன்றவில்லை. பாரதியின் பெயரால் ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து, பாரதியின் ஆய்வில் ஈடுபட்ட முதற்சங்கம் க்ல்கத்தாவில்தான் தோன்றிற்று என்று கருதுகிறேன். இச்சங்கம்தான் பாரதியார் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கக் கணிசமான முயற்சியை மேற்கொண்டது.

பாரதி பாடல்கள் தடை செய்யப்பட்டவுடன், சீறி எழுந்து, அவருடைய பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தொடங்கியவர் ராஜாஜி. தடைநீக்கம் செய்யப்பட்ட நிலையிலும் அப்பாடல்களைக் காந்திஜி தாம் நடத்திய பத்திரிகையில் வெளியிட்டார்.

மகாகவி தாம்பாடிய பாடல்களைத் தொகுத்து முறையாக ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்கவில்லை. நல்ல வேளையாக அவருடைய மகள் தங்கம்மா இயன்ற வரையில்

அவற்றை வரிசைப்படுத்தி ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார். பின்னாளில் இதைக் கண்டு மகிழ்ந்த பாரதியார் அவற்றை அச்சில் ஏற்ற எண்ணம் பூண்டார். மகாகவி காலத்தில் சொல்வடிவம் பெற்ற பாடல்கள் மிகக் குறைவானவை. அவர் காலத்திற்குப் பிறகே பல பாடல்கள் நூல் உருப்பெற்றன.

பல சமயங்களில் தம் பாடலை எழுதி யதுகிரியிடம் தந்திருக்கிறார். அவற்றையெல்லாம் யதுகிரி காப்பாற்றி வைத்திருந்தார். புதுவைப் புயலில் அவை அழிந்துபோயின. நண்பர்களுக்குக் கடிதம் எழுதும்போது அவர் பாடல் துணுக்குகளையோ, முழுப்பாடலையோ வரைந்திருக்கலாம். இதுவகையில் தேடும் முயற்சி மேற்கொள்ளப் படவேண்டும். பல நேரங்களில் கிடைத்த தாள்களில் பலவற்றை மகாகவியே பொறித்துவைப்பது வழக்கம். அவை கிடைக்காமல் போய்விட்டன. சிலவற்றை அவர் இளவல் விஸ்வநாத ஐயர் காப்பாற்றியுள்ளார்.

பாரதியார் நண்பர்கள் பற்றிச் சில நூல்கள் வந்துள்ளன. அவற்றில் கபாலி சாத்திரியார் இடம் பெறாது இருப்பது முறையன்று என்பது என் கருத்து. பெ.சு.மணி. இவர்பற்றி வரைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கபாலி சாத்திரியார் என்ற சமற்கிருத அறிஞர் வேதத்தில் துறைபோகியவர். இவர் ஸ்ரீ அரவிந்தரையும், ரமணமகரிஷியையும் தம் குருவாகக் கொண்டவர். ஆர்யா பத்திரிகை தொடங்கப்பட்ட காலத்திலேயே ஸ்ரீ அரவிந்தர் வரைந்த வேதசம்பந்தமான கட்டுரைகளைப் படித்துக் கிளுகிளுத்துப் போன அவர் எங்ஙனமேனும் அம்மகானின் நட்பைப் பெறத் துடிதுடித்தார். பாரதியார் ஸ்ரீ அரவிந்தருடைய நெருங்கிய நண்பர் என்று அறிந்திருந்த சாத்திரியார், மகாகவி மூலம் தாம் வேட்ட நட்பைப் பெறவிழைந்தார். சென்னையிலிருந்து புறப்பட்டு நேரே புதுச்சேரிக்கு வந்தார். இனி, கபாலி சாத்திரியார் கூறுவதைக் கேட்போம்.

".... I decided to take the trip with this main object of visiting Sri Aurobindo. On arrival, at Pondicherry, I called at poet Bharati's. He was then living in Ishwaran Dharmaraja Kovil Street and when I was announced, his little daughter led me up to the first floor where I found him singing:" இந்த ஜன்பத்திலே ஜயமுண்டு பயமில்லை மனமே."

"Then after a pause he made enquiries of one or two friends in Madras. I had met Bharati a little before 1907. But what a change! Circumstances had conspired to week the physique

and the handsome and spirited face of the inspired poet..... suddenly he burst out.

குகனே, பரமன் மகனே குகையில் வளரும் கனலே,

"I know Bharati had some knowledge of sanskrit which he had studied at Kashi. Bet not that he had acquainatnce with the vedas deep enough to give expression to such an essentially Vedic conception as the growing Flame in the heart of man. Besides, the poet identifies Agni as Guha. Kumara. son of the supreme. When I asked him how he caught the idea. he gave an interesting explantion in the course of which he said."

"Yes. I have studied 200 hymns (I do not quite recollect whether he said hymns or Rites) under Aurobindo Ghose."

It was from Bharati himself that I learnt he got the inspiration and general knowledge of the Vedic Gods and hymns from Sir Aurolindo. Later he translated into Tamil some of the Vedic hymns to Agni."

- Collected works of T.V. Kapali sastri,
Volume Two. pp 232-33

இச் செய்தி, "Versatile Genius - Sri T.V. Kapali Sastriar" என்ற தொகுப்பு நூலின் பக்கங்கள் 298-99 இல் காணப்படுகின்றன. இந்நூலின் பதிப்பாசிரியர் M.P. பண்டிட், T.V. Kapali Sastri என்ற தலைப்பில் முனைவர் பிரேமா நந்தகுமார் வரைந்திருக்கும் ஆங்கில நூலிலும் பக்கங்கள் 8-9 இல் செய்தி பற்றி மேலும் அறியலாம். ஸ்ரீ அரவிந்தர் அருளிய ரிக்வேதம் - அக்னி ஸுக்தங்கள் என்ற தலைப்பில் கபாலி சாத்திரியார் ஒரு தமிழ் நூலைச் சமற்கிருத மூலபாடங்களுடன் வெளியிட்டுள்ளார் (1947) இதில் அடங்கியிருக்கும் ஸ்ரீ அரவிந்தரின் முன்னுரை 49 பக்கங்கள் கொண்டது. சாத்திரியார் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் தங்கி இந்நூலை முயன்று வெளியிட்டுள்ளார். இந்நூலை நன்கு பயில்வோர் வேத கீதங்களின் பொருளை உணர்வார்கள்.

மகாகவி பிறந்த நூற்றாண்டையொட்டித் தமிழ் பேசும் மக்களிடையே ஒரு பெரிய எழுச்சி உருவாயிற்ற என்பதை முன்பே கண்டோம். உலகெங்கும் தமிழ் பேசும் மக்களிடையே உருவாகிய இவ்வெழுச்சியின் பயனாகப் பாரதி ஆய்வு அழுத்தம் பெற்றது.

அரசு காட்டிய அக்கறை ஒருவகையில் இவ்வாய்விற்குத் துணையாக அமைந்தது. தமிழகப் பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்ட பாரதி அறக்கட்டளைகளும் தொடர் ஆய்வுக்கு வகைசெய்தன. இதில் பண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக வெளிவந்த நூல்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறவேண்டியது அவசியமாகும்.

பாரதிநூல்களின் பதிப்பு வரலாறு பற்றிச் சீனி. விசுவநாதன் 1989இல் மிக அற்புதமான நூலைச் சமைத்திருக்கிறார். இவர் உருவாக்கியிருக்கக்கூடிய மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை (1981), பாரதி நூல்கள் விவரக்கோவை (1987) மிகச் சிறந்த நூல்களாகும்.

பாரதி என்றதும் உடன் நினைவுக்கு வருபவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். இரு மகா கவிகளையும் இனைத்து முனைவர் ச.சு. இளங்கோ எழுதிய நூல் பாரதிதாசன் பார்வையில் பாரதி (1982), முனைவர் சி. கனகசபாபதி தம்முடைய முனைவர்பட்ட ஆய்வேட்டை 1980ல் பாரதியும் பாரதிதாசனும் - ஒப்பியல் திறனாய்வு என்ற நூலாக வெளியிடச் செய்தார்.

1989இல் மா. செல்வராசன் படைத்த பாரதி - பாரதிதாசன் என்ற நூல் வெளிவந்தது.

1989இல் பாவலர் மணி புலவர் ஆ. பழநியின், பாரதிதாசன் பாரதிக்குத்தாசனா? என்ற நூல் வெளிவந்தது. 1990இல் விஜயா ஆசீர் அம்மையாரின் பாரதி - பாரதிதாசன் நோக்கில் பூவையர் என்று நூல் வெளிவந்தது.

1992இல் பாரதியாரோடு பத்தாண்டுகள் பாரதிதாசன் என்ற தொகுப்பு நூலை முனைவர் ச.சு. இளங்கோ வழங்கியுள்ளார்.

பாவேந்தரின் மகன் மன்னர்மன்னன் பாட்டுப்பறவைகள் என்ற நூலை 2000ஆம் ஆண்டில் வெளியிட்டார். இருபெருங் கவிஞர்கள் (பாரதி - பாரதிதாசன்) என்ற கவிதை நூலை 1999இல் பாவலரேறு ச. பாலசுந்தரம் வெளியிட்டார்.

பாரதியை உலகக் கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பல்வேறு ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: க. கைலாசபதியின் இரு மகா கவிகள் (தாகூர் - பாரதி) (1962), சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் வள்ளலாரும் பாரதியும் (1965), பி.ஸ்ரீ.யின் பாரதியும் தாகூரும் (1970), வி. சச்சிதானந்தனின்

Whitman and Bharati: A Comparative Study (1978), டி.வி. சங்கரக்குமாரின் பாரதியும் திரு.வி.க.வும் (புயலும் தென்றலும்) (1983), என். சுப்பிரமணியனின் Robert Frost and Subramania Bharati (1984). எம். சோலையனின் பாரதியும் மில்டனும் (1985), சாமுவேல் தாசனின் பாரதியும் வள்ளத்தோளும் - ஒப்பியல் பார்வை (1986), சக்கர இலக்குமி காந்தனின் பாரதியின் குயில்பாட்டும் கீட்சின் இலாமியாவும் (1987), டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் A Comparative study of Bharati and Vallathol (1991), கே. செல்லப்பனின் Tagore, Bharati and T.S. Eliot; Towards Creative Unity (1987), கமலா பத்மகிரீஸ்வரனின் பாரதியும் புஷ்கினும் (1992), டாக்டர் ஜான் சாமுவேலின் The Harp and the Veena (A comparative study of P.B. Shelly and C. Subramania Bharati) (1993), அருணனின் முப்பெரும் கவிஞர்கள் (பாரதி-பாரதிதாசன்-பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்) (1994), ஆ. இரா. வேங்கடசலபதியின் வ.உ.சி.யும் பாரதியும் (1944), முனைவர் கோ. கேசவனின் பாரதி முதல் கைலாசபதி வரை (1198), முனைவர் ச. சுப்புரத்தினத்தின் பாரதியாரும் அரவிந்தரும் (1998).

டாக்டர் ம. சச்சிதாணந்தனின் The Impact of Western Thought on Bharati (1970) என்ற நூலில் பல மேல்நாட்டுக் கவிஞர்களுடன் பாரதி ஒப்பீடு செய்யப்பட்டுள்ளார்.

இந்நூல்கள் ஒரு சிலவற்றுள் முக்கியமாக நட்பும், தாக்கமும் இடம்பெறுகின்றன.

பாரதியார் ஒரு சிறந்த இசைப்புலவருமாவார். இவ்வகையில் அவரையும், இசையையும் இணைத்து எழுதப்பட்ட நூல்களில் குறிப்பிடத்தக்கவை: பத்தமடை எஸ். கிருஷ்ணனின் பாரதியார் பாடல்கள் (1981), சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையின் வெளியீடான மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் (1986), தி. முத்து கிருஷ்ணனின் நல்லதோர் வீணை (1993), சீனி. விசுவநாதனின் பாரதியும் சங்கீதமும் (1999).

பாரதியாரின் வாழ்க்கை வரலாறு பற்றி வரையப்பட்ட நூல்களில் குறிப்பிடத்தக்க நூல்கள் அவர் குடும்பத்தாராலேயே (அதாவது செல்லம்மாள், தங்கம்மாள், சகுந்தலா, விஸ்வநாத ஐயர்) எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் 1982 இல் வெளிவந்த கவிஞர் வைரமுத்துவின் கவிராஜன் கதை, 1987இல் வெளிவந்த வில்லி யனூர் பழநியின் குயில்கள், கொத்தமங்கலம் சுப்புவின் பாட்டிலே பாரதி (1982), 1996இல் வெளிவந்த சீனி. விசுவநாதனின் மகாகவி பாரதி வரலாறு, 2000 ஆண்டில் வெளிவந்த என். சுப்பிரமணியன்

எழுதிய Psychobiography of C. Subramania Bharati ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன.

பாரதியார் படைப்புகளைப் பற்றிய ஆங்கில நூல்களுள் விஜயபாரதி எழுதிய Subramania Bharathi - Personality and Poetry (1975). கே. மீனாட்சி சுந்தரம் எழுதிய A study on the poetical works of Subramania Bharathi (1965). பேராசிரியர் ந. மகாதேவன் எழுதிய Subramania Bharati - Patriot and Poet (1957) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

பாரதியாரின் வாழ்க்கையையும், அவரது படைப்புகள் சிலவற்றையும் நாடகமாக்கியும் தந்திருக்கின்றனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: ஆ. ஜி. ரங்கநாயகியின் பாரதியார் இல்லற நாடகம் (1981), பி.எஸ். ராமையாவின் பாஞ்சாலி சபதம் (1982), சென். பெருமாளின் பாரதியாரில் மூன்று நாடகங்கள் (1982), சிலோன் விஜயேந்திரனின் பாரதி வரலாற்று நாடகம் (1982), கோபிகிருஷ்ணன் கோட்டூரின் Fire in the Soul (1995) பட்டுக்கோட்டை குமாரவேலின் வாழ்வுதந்த பாரதி (1989), ஆதவனின் புழுதியில் வீணை (1988).

பாரதியின் படைப்புகளைத் தனித்தனியாகவும் ஆய்வுகள் செய்துள்ளனர். *மது.ச. விமலானந்தனின் பாரதி சபதம்* (1963) பாஞ்சாலி சபதம் பற்றிய ஆய்வாகும் புலவர் தி. தேவிதாசன் ஞானரதம் ஒரு கண்ணோட்டம் (1981) என்ற நூலை எழுதியிருக்கிறார், பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் கண்ணன் பாட்டுத் திறன் (1982) என்ற நூலில் கண்ணன் பாட்டுப் பற்றி ஆய்ந்துள்ளார். என். ஆண்டியப்பன் பாரதியின் பாஞ்சாலி சபதம் (1983) என்ற நூலை எழுதியுள்ளார். டாக்டர் மின்னூர் சீனிவாசனின் பாரதியின் குயில்பாட்டு விளக்கம் (2985) குறிப்பிடத்தக்க நூலாகும். டாக்டர் கு. முத்துராசன் பாரதக் கதையும் பாஞ்சாலி சபதமும் (1994) என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். டாக்டர் ந. பிச்சமுத்து, பாஞ்சாலிசபதம் ஒரு சமூக வரலாற்றுப் பார்வை (1994) என்ற நூலை எழுதியுள்ளார். பாரதி பாடம் (1974) என்ற நூலில் ஜெயகாந்தன் குழந்தைகளுக்கான பாடல்களை ஆய்வு செய்துள்ளார்.

பாரதியின் மொழிநடை குறித்துத் தனி ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: வை. தட்சிணாமூர்த்தியின் பாரதியின் தமிழ் (1964), பாரதிப் பித்தனின் பாரதியின் சொல்லாட்சி (1982), நெய்வேலி சக்தியின் சொல்புதிது, பொருள் புதிது (1982), டாக்டர் கி. கருணாகரன், வ. ஜெயா எழுதிய பாரதி தமிழ் *(1987)*, டாக்டர் வ. ஜெயா எழுதிய பாரதி

மொழிநடை (1987), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் வெளியிட்ட பாரதி தத்துவம், கலை, இலக்கியம், மொழி (1999).

பாரதியின் படைப்புகளில் சமயம்பற்றிய ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன. வடக்கன்குளம் ம. செல்வராசனின் பாரதியின் பரம்பொருட்பாதை (1963), பி.ஸ்ரீ.யின் பாரதி கண்ட பராசக்தி (1963), நஜன் எழுதிய *பாரதி கண்ட தெய்வதரிசனம்* (1981), மிழலைத் தொண்டனின் மகாகவியின் இலக்கியத்தில் பக்தி நெறி (1983), அம்மன் சத்திய நாதனின் பாரதியும் சக்தி வழிபாடும் (1984), நவபாரதியின் இன்றைய தத்துவஞானப் போராட்டத்தில் பாரதியின் பாத்திரம் (1986), ந. இரவீந்திரனின் பாரதியின் மெய்ஞ்ஞானம் (1986), முனைவர் தி. முத்துக் கண்ணப்பன் எழுதிய பாரதியும் சமயமும் (1990), டாக்டர் நா. இலக்குமணப் பெருமாளின் காலத்தால் கனிந்த கவிஞன் (1993) ஆகியவை குறிப்பிடத்தக்க நூல்களாகும். 1995இல் ஜெர்மனியிலிருந்து செபஸ்டியன் ஜோசப் எழுதிய God as Feminine என்ற நூலின் முதற்பகுதி பாரதியின் சக்தி வழிபாட்டை ஆய்ந்துள்ளது. 2000 ஆண்டில் சுப. தனுஷ்கோடி என்பவர் பாரதியின் சமயம் என்ற நூலை எழுதியுள்ளார்.

பாரதி வேதங்கள் மீதும், உபநிடதங்கள் மீதும் கொண்டிருந்த வாஞ்சை அனைவரும் அறிந்ததே. பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை என்ற நூலைப் பெ.சு. மணி (1978), பாரதி போற்றிய பன்னரும் உபநிடத நூல் என்ற நுலைத் தி. சா. ராஜு (1982), வேதம் புதுப்பித்த தீரர் என்ற நூலை டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் (1997), பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம் என்ற நூலைப் பெ. சு. மணி (1998) படைத்ததன் மூலம் தொடர் ஆய்வுக்கு வழி வகுத்துள்ளனர்.

பாரதி சமுதாயப் பிரக்ஞையுள்ள கவிஞர். எனவே, அவருடைய சமுதாய உணர்வைப் பற்றிய ஆய்வு நூல்கள் பல வெளிவந்துள்ளன. 1976 இல் கா. திரவியம் பாரதியாரும் புதிய சமுதாயமும் என்ற நூலையும் திரு ரகுநாதன் அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும் (1977) என்ற நூலையும், பெ.சு. மணி பாரதியாரும் சமூக சீர்திருத்தமும் (1980) என்ற நூலையும் எழுதியுள்ளனர். தா. பாண்டியனின் பாரதியும் சாதிகளும் (1981), பெ. மணியரசன், மா. வளவன் எழுதிய பாரதி ஒரு சமூகவியல் பார்வை (1982), ர. சண்முகம் எழுதிய பாரதி கண்ட சமுதாயம் (1982), கோ. கேசவன் எழுதிய சோசலிசக் கருத்துக்களும் பாரதியாரும் (1987), அ.ப. பாலையன் எழுதிய பாரதியாரும் ரஷ்யப் புரட்சியும் (1988), பேராசிரியர் டாக்டர் பி. யோகீசுவரனின் பாரதியின் சமுதாயப்

பார்வை (1999), அறந்தை நாராயணனின் பாரதி பாராட்டிய புதுமன்னன் லெனின் (2000), பெ.சு. மணியின் சமூக சீர்திருத்த வரலாற்றில் பாரதியார் (2000) ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

பாரதியுடன் தொடர்புகொண்ட அறிஞர்களும் நண்பர்களும் எண்ணற்றவர்கள். பாரதியாரால் பூணூல் அணிவிக்கப்படும் பேறுபெற்ற ரா. கனகலிங்கம் 1947 இல் என் குருநாதர் பாரதியார் என்ற நூலை எழுதினார். பாரதியார் பற்றிய நினைவுக்கு குறிப்புகளைப் புதுவையில் தேச பக்தர்கள் என்ற நூலாக என். நாகசாமி, ஸ்ரீ சுந்தரேசஐயர், பி. ஸ்ரீ. ஆச்சாரியார், யதுகிரி அம்மாள் ஆகியோர் 1966 இல் எழுதினர். புலவர் மு.த. வேலாயுதனாரின் புதுவையில் பாரதியார் (1982), பெ. சு. மணி தொகுத்த அறிஞர்கள் பார்வையில் பாரதி (1982), ஸ்ரீ.வி.எஸ். குஞ்சிதபாதத்தின் புதுவையில் பாரதியார் நான்கண்டதும் கேட்டதும் (1982), ரா.அ. பத்மநாபன் தொகுத்த பாரதியைப்பற்றி நண்பர்கள் (1982), சீனி. விசுவநாதன், டி.வி.எஸ். மணி தொகுத்த மகாகவி பாரதி மஞ்சரி (1982), சோவியத் நாடு பிரசுரங்கள் வெளியீடான மகாகவி பாரதி பற்றிச் சோவியத் அறிஞர்கள் (1982), கவிஞர் தண்டமிழ்ப் பித்தன் எழுதிய பாரதியும் புதுவை நண்பர்களும் (1985), பூவை அமுதனின் பாரதியும் நண்பர்களும் (1994) ஆகியவை குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

பாரதியின் புதிய ஆத்திசூடி என்ற தலைப்பில் பலர் உரையும் விளக்கமும் எழுதியுள்ளனர். திருமதி லலிதா பரமேசுவரன் (1982), அ. குமரேசன் (1997), கு. சண்முகசுந்தரம் (1998), பாரதிசுராஜ் (2000) ஆகியோரின் உரைகள் குறிப்பிடத்தக்கன.

பாரதி ஒரு பத்திரிகை ஆசிரியராவார். இவரது இதழியல் பணிகள் பற்றிப் பெ.சு.மணி, பத்திரிகையாளர் பாரதியார் (1989), சீனி. விசுவநாதன், பாரதியின் பத்திரிகை உலகம் (1993) ஆகிய நூல்களை எழுதியுள்ளனர். முனைவர் பா. இறையரசனின் முனைவர் பட்ட ஆய்வேடு இதழாளர் பாரதி என்ற மகுடம் தாங்கி 1995இல் வெளிவந்தது. அருமையான பலதகவல்கள் இந்நூலின்கண் உள. இந்தியா சஞ்சிகைகள் பலவற்றை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டவர் இளசை மணி. இவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழ்மணி மானா எழுதிய இதழியல் முன்னோடி எங்கள் பாரதியார் என்ற நூல் 1997இல் வெளிவந்தது.

பாரதியின் கவிதைகள், கவித்துவம், கவிநயம் பற்றி யெல்லாம் பல்வேறு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

வ.ரா. மகாகவி பாரதியார் (1944)

ப.மீ. சுந்தரம் - பாரதியார் வரலாறும் கவிதையும் (1954)

டாக்டர் மு. கோவிந்தசாமி -கவித்திறன் (1955)

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் - பாரதி பாநிலை (1972)

சீனி. விசுவநாதன் - தமிழகம் தந்த மகாகவி (1978)

பேராசிரியர் ம.வி. சுதாகர் - பாரதியின் பண்பாடு (1981)

ரா. அ. பத்மநாபன் - பாரதியார் கவிநயம் (1982)

ம.வி. சுதாகர் - பல்கலை நோக்கில் பாரதி (1982)

உறந்தை செந்தமிழ்ச் செல்வன் - பாரதி ஒரு பகுத்தறிவுவாதி (1982)

பா. வளன் அரசு - பாரதியார் புலமை நலம் (1982)

டாக்டர் ஆ. இன்னாசி - பாரதி இயல் (1982)

மீரா - பாரதீயம் (தொகுப்பு) (1983)

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் - பாரதீயம் (1993)

டாக்டர் ச. நா. கணேசன் - பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞர் (1988)

சீனிவிசுவநாதன் - பல்வேறு கோணங்களில் பாரதி (1992)

கலைமாமணி விக்கிரமன் - பன்முகப் பார்வையில் பாரதியின் படைப்புகள் (1995)

டாக்டர் சிற்பி - பாரதி என்றொரு மானுடன் (தொகுப்பு) (1997)

திருலோக சீதாராம் - புதுயுகக் கவிஞர் (1981)

எதிரொலி விசுவநாதன் - மக்கள் போற்றும் மகாகவி (1981)

வை. சச்சிதானந்தன் - பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும் (1985)

சீனி. விசுவநாதன் - மகாகவி பாரதி வரலாறு (1996)

டி.என். இராமச்சந்திரன் - வழிவழி பாரதி (2000)

1988-ஆம் ஆண்டில் டாக்டர் வா.செ.குழந்தைசாமி எழுதிய பாரதியின் அறிவியல் பார்வை என்ற நூலும், டாக்டர் தே. வேலப்பன் எழுதிய பாரதியின் பொருளியல் கருத்துக்கள் என்ற நூலும் வெளிவந்துள்ளன.

பாரதியின் பெண்ணியக் கொள்கை நாடறிந்த ஒன்று. இவ்வகையில் வெளிவந்த நூல்கள் சில. மணிமேகலைப் பிரசுரம் 1981இல் பாரதியும் பெண்மையும் என்ற நூலை வெளியிட்டுள்ளது. ம. செல்வராசனின் மங்கையர்க்குப் பாரதியார் (1982), நிலவு எழுதிய பாரதி கண்ட புதுமைப் பெண் (1992) ஆகியவை குறிப்பிடத்தக்கன. மகாகவி பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகளைத் தொகுத்து 2000 ஆண்டில் புதுச்சேரி பாரதி அன்பர்கள் நூலாக வெளியிட்டுள்ளனர்.

மகாகவி பாரதி பற்றிய திறனாய்வுகளும், அத் திறனாய்வுகளைப் பற்றிய மதிப்பீடுகளும் வெளிவந்துள்ளன. பின்வருவன அவற்றுள் சில.

விஜய பாரதி - மகாகவி பாரதி ஒரு திறனாய்வு (1978)

ரகுநாதன் - பாரதி சில பார்வைகள் (1982)

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் - பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் (1982)

ம.பொ.சி. - பாரதியார் பற்றி ம.பொ.சி பேருரை (1983)

சீனி. விசுவநாதன் - பாரதி ஆய்வுகள் சில சிக்கல்கள் (1985)

டாக்டர் கி. கருணாகரன்
டாக்டர் இரா. சந்திரசேகரன் | பாரதி ஆய்வு (1986)

டாக்டர் நா. செயராமன்
டாக்டர் கி. கருணாகரன்
டாக்டர் இரா.சந்திரசேகரன் | பாரதி ஆய்வுக் கோவை (1987)

டாக்டர் ஐசக் சாமுவேல் நாயகம் - பாரதியார் கவிதை நூல்கள் குறித்த ஆய்வுகள் - ஒரு மதிப்பீடு (1992)

கடந்த காலத்தில் பாரதி ஆய்வு குறித்த போக்கினை ருவாறு கண்டோம். இனிப் பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுத் ந்வையினையும், போக்கினையும் காண்போம்.

2. பாரதி படைப்புகள் பற்றிய எதிர்கால ஆய்வுகள்

உலகமெல்லாம் தமிழோசை பரவச் செய்ய விரும்பிய பாரதியாரின் பாடல்கள் என்ன என்ன மொழிகளில் மொழி பெயர்ப்புப் பெற்றுள்ளன என்பதை முற்றுமாக ஆய்ந்து அதற்கென ஒரு தனிநூல் வரையப்பட வேண்டும். நான் அறிந்த வகையில் பாரதியார் பாடல்களின் குறிப்பிட்ட பகுதிகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்ய மொழி, ஜப்பானிய மொழி, வங்காளி, மராத்தி, இந்தி, ஒரியா, கன்னடம், மலையாளம், தெலுங்கு, சிங்களம், மலேசிய மொழி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இங்ஙனம் வெளிவந்திருக்கும் பாடல்களின் மொழி பெயர்ப்பை அந்தஅந்த மொழி அறிந்த தமிழர் சீர்தூக்கிப் பார்த்துத் திறனாய்வு செய்தல் மிகவும் முக்கியமான பணி.

பாரதியார் காலத்திலேயே அவருடைய பாடல்கள் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் வெளியிடப்பட்டன. ஒரு சீட்டுக் கவியில் பாரதியார் கூறியிருப்பதாவது.

பிரான் ஸென்னு முயர்ந்த புகழ் நாட்டினுயர்
 புலவோரும் பிறரு மாங்கே
விராவு புகழ் ஆங்கிலத் தீங்கவி யரசர்.....

மகாகவி குறிப்பிடும் பிரெஞ்சுக்காரர் யார்? ஆய்வு செய்து கண்டுபிடிக்க வேண்டும். பாரீஸ் தேசீய நூல்நிலையத்தில் செய்திகள் கிடைக்கும். மகாகவி சுட்டிய ஆங்கிலக் கவிஞர் James H. Courius. இந்தியாவின் மீது பரிவு சொண்டவர். நம் நாட்டில் பல மாதங்கள் தங்கி நம் மக்களோடு பழகியவர். ஜப்பான் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கியவர்.

எஃப். ஏ. ஸ்டில் என்பார் பாடிய பாடலை மொழி பெயர்த்துக் கலியுக முடிவு என்ற தலைப்பில் பாரதியார் வெளியிட்டிருக்கிறார். இதுபற்றிய மேல்விவரங்கள் தெரியவில்லை. அக்காலத்தில் Modern Review என்று ஒரு சஞ்சிகை வந்தது. அதில் வெளிவந்த ஸ்ரீஅரவிந்தர், தாகூர், ஷொகூஷி போன்றார் பாடல்களைப் பாரதியார் மொழிபெயர்த்து வெளியிட்டார். இவற்றிற்கான விவரங்களைத் தேட வேண்டும். Herald of Star என்ற பத்திரிகையில் வெளிவந்த - ஜான் ஸ்கர் வரைந்த பாடலைக் கற்பனையூர் என்ற தலைப்பில் பாரதியார் மொழிபெயர்த்து வெளியிட்டார். Asiatic Review என்ற பத்திரிகையில் சியூசிஸ் என்ற சீன நாட்டுப் பெண்ணின் பாடல் ஆங்கில வடிவில் கூறப்பட்டது. மகாகவி, `பெண்விடுதலை' என்ற தலைப்பிட்டு அந்தப் பாடலைத் தமிழில் தந்துள்ளார். மாட் ரால்ஸ்டன் ஷர்மனின் ஆங்கிலப் பாடலை `இந்தியாவின் அழைப்பு' என்ற தலைப்பிட்டுத் தமிழாக்கம செய்திருக்கிறார் பாரதியார். எந்த நூலில் அல்லது சஞ்சிகையில் இப் பாடல் வந்தது என்று ஆராயப்படல் வேண்டும். Modern Review இதழ்களை ஆய்ந்து, அவை சாற்றிய செய்திகள் எவ்வகையில் நம் கவியிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் கண்டுணர வேண்டும். இப்பணியில் ஈடுபடுமுன் பாரதியாரின் உரைநடைப் பகுதிகளைக் கவனமாக ஆய்வாளர் பயில வேண்டும். `அநோ பத்ரா : க்ருதவோ யந்து விஷ்வக!' என்ற ரிக் வேத வாக்கை அனுசரித்தவர் நம் மகாகவி.

பாரதி பாடல்களை இயன்றவரையில் காலவரிசைப் படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. அவருடைய உரைநடைகளையும் காலவரிசைப்படுத்தி வெளியிட வேண்டும். இது எளிய பணியன்று. என்றாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணி இது.

பாரதியார் எழுத்துக்க்ளைக் காலவரிசைப்படி வெளியிட வேண்டும் என்று அரும்பாடுபட்டு வருபவர் சீனி. விசுவநாதன் அவர்களே. 48+1040 பக்கங்கள் கொண்ட முதற்பகுதியை வெளியிட்டு விட்டார். மிக அற்புதமான வெளியீடு இது. இதுபோல் இன்னும் 6 பகுதிகள் வெளிவரவேண்டும். இரண்டாம் பகுதியும் அண்மையில் வெளியிடப்பட்டுவிட்டதாக அறிகிறேன். இது வகையில் சீனியாருக்குப் பெரிதும் உதவிவருபவர் நல்லி குப்புசாமி செட்டி அவர்கள். முதற்பகுதியை வைத்து மூன்று நாள் கருத்தரங்கம் நிகழ்த்த வேண்டும்.

இம்முதல் தொகுதிக்கான காலம் 24-1-1897 இல் தொடங்கி 29-12-1906 இல் நிறைவுறுகிறது. 263 தலைப்புகளில் செய்திகள்

காலவரிசையில் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. இப்படியே இனிவரும் தொகுதிகளும் தொகுத்தளிக்கப்பட உள்ளன. நிதி மிகுந்தவர் அவருக்குப் பொற்குவை தாரீர் என்பது என்வேண்டுகோள்.

ஏராளமான இதழ்களைப் பாரதியார் பார்வையிட்டுப் பயன்கண்டிருக்கிறார். கல்கத்தா பத்திரிகைகளான அமிர்த பஜார், இந்தியன் ஓர்ல்ட், இங்கிலீஷ்மென் எம்பயர், சோனார் பங்களா, நியூ இண்டியா, பிரபுத்த பாரதம், பெங்காளி, வந்தே மாதரம், ஹிந்து பேட்ரியாட், ஸ்டேட்ஸ்மன், ஆகிய இவற்றை நமக்கு அறிமுகம்செய்து வைத்திருக்கிறார் நம் மகாகவி.

பம்பாய்ப் பத்திரிகைகளான இண்டியன் சோஷியல் ரிஃபார்மர், இந்து பிரகாஷ், டைம்ஸ் ஆப் இந்தியா, ஹிந்து ஸ்வராஜ், இலண்டன் பத்திரிகைகளான இண்டியா, இண்டியன் சோஷாலஜிஸ்ட், இன்வெஸ்டர்ஸ், ரெவியூ, கன்டெம்பரரி ரெவியூ, நியூ ஸ்டேட்ஸ்மன், பஞ்ச், மான்செஸ்டர் கார்டியன், ரெவியூ, ஆஃப் ரெவியூஸ், லண்டன் அப்சர்வர், லண்டன் டைம்ஸ், வெஸ்ட் மின்ஸ்டர் கெசட், ஸ்டார், ஸ்பீக்கர், ஸ்பெக்டேட்டர், ஸ்வராஜ்யா, அமெரிக்கப் பத்திரிகைகளான காஸிப் அமெரிக்கன், சன், நியூயார்க் ஓர்லட், கெய்ரோ பத்திரிகையான அட்வீலா, ஜப்பான் நாட்டு இதழ்களான டோக்கியோ மானிச்சி, யோர்த்ரை, ஜப்பான் க்ரானிகின், ஜப்பான் டைம்ஸ், ஜப்பான் தினசரி, ஜெர்மன் இதழ்களான ப்ராங்பர்த்தெர், பெர்லின் தகம்ளாத், ஹம்பர்கொ ஜெய்ரங் மற்றும் பலப்பல இதழ்களைப் படித்துப் பார்த்துச் சுடச் சுடச் செய்திகளைத் தந்தவர் நம் மகாகவி. அவருக்கு நிகரான இதழாளி அவர் காலத்தில் எவருமிலர் என்பேன். இங்குக் கூறப்பட்ட பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய செய்திகளைத் தேடவேண்டும்.

பாரதியாரின் வடமொழி அறிவுபற்றி ஒரு தனிநூலே எழுதப்படவேண்டும். வடமொழியில் விளங்கிநிற்கும் பல கருத்துக்களை அவர் தமிழில் தந்திருக்கிறார்.

"பசுர் வேத்தி சிசுர் வேத்தி கான ரஸம் பணீ:" என்பதைக் காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவை அதனைப் பாம்பறியும் என்று மொழி பெயர்த்திருக்கிறார். ஜநநி ஜந்ம பூமிச்ச ஸ்வர் காதபி கரீய ஸீ என்பதைப் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்று தமிழாக்கம் செய்திருக்கிறார். சில சமயங்களில் தமிழில் தம் கருத்துக்களைக் கூறிவிட்டு, அவையிற்றுக்கு ஆதாரமாக வடமொழி

வாக்கியங்களை (மொழி பெர்க்காமல்) அப்படியே தருகிறார். காட்டு ஒன்று காட்டுகிறேன். "நாந்யக: பந்தா வர்த்ததே அய நாயக:" என்ற வாக்கியம் ஆறில் ஒரு பங்கு என்ற கதையில் வருகிறது. பிராயச்சித்தம் என்ற கதையில் இரு சாத்திரிகள், சம்பந்தப்பட்டவர் அறியாத வகையில், தக்ஷிணை பற்றிப் பேரம் பேசுவதை வடமொழியில் வருணித்திருக்கிறார். மேலும், நீதி நூல்களிலிருந்து மேற்கோள்களை வடமொழியிலேயே தந்திருக்கிறார்.

Prestige என்ற ஒன்று நம்மைப் படாத பாடு படுத்துகிறது. இதுபற்றி மகாகவி கூறுவதாவது:

யாதேவீ ராஜ்ய சாஸ நே
ப்ரஸ்டிஜ் ரூபேண ஸமஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை
நமஸ்தஸ்யை நமோநம:

இது தாகூர் இயற்றியதா, மகாகவி இயற்றியதா என்று ஆய்வு செய்ய வேண்டும். தம் கட்டுரைகளில் பல இடங்களில் கீதை வாசகத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். வேதப்பாடங்கள், பகவத் கீதை, சில உபநிடதங்கள், பதஞ்சலி யோக சூத்ரம் போன்றவற்றை மகாகவி தமிழில் தந்திருக்கிறார். நையாண்டிப் பாடல்களையும் அவர் வடமொழியில் யாத்திருக்கிறார். சூரத் காங்கிரஸ் கூட்டத்தை வருணித்து மகாகவி மூன்று மொழிகளைக் கலந்து காங்கிரஸ் கீதை என்று ஒரு பனுவல் படைத்தார். இன்று ஒரு ஸ்லோகம் மட்டும் நமக்குக் கிடைக்கிறது. தேவி வஸந்தானந்தா இதை, தம்முடைய `புதுவையில் பாரதியார்' என்னும் நூலில் பக்கம் 26இல் பொறித்துள்ளார்.

"தர்ம க்ஷேத்ரே சூரத் க்ஷேத்ரேஸமவேதா யுயுத்ஸவஹ
மாம காஹ எக்ஸ்ட்ரீமிஸ்ட் மாடரேட்ஸ் சைவ
கிம குர்வத ஸஞ்சயா"

க்ஷுதித பாஷாணம் என்ற தலைப்பில் ஒரு கதை Modern Review -வில் வந்தது. யதுகிரியின் பெரியப்பா அதற்குப் பொருள் என்ன என்று கேட்க, மகாகவி பசிகொண்ட கற்கள் அல்லது பாறைகள் என்று விடை சாற்றினார்.

வேதப் பாடல்களின் சூக்குமப் பொருள்களைக் மகாகவி ஸ்ரீ அரவிந்தரிடம் பயின்றார். காசியில் வடமொழியைப் பயின்ற மகாகவி, ஸ்ரீ அரவிந்தரிடம் வேத நுட்பங்களை அறிந்து கொண்டார்.

எதையும் இலகுவில் ஈர்த்து வாங்கித் தக்க வைத்துக் கொள்ளும் வல்லபம் பாரதியாரின் இயல்பு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதிக முயற்சியில்லாமல் விரைவிலே வேதநுட்பங்களைத் தாம் பெற்றமைபற்றி மகாகவி இங்ஙனம் கூறியுள்ளார்.

வித்தை நன்கு கல்லாதவன் என்னுளே
வேத நுட்பம் விளங்கிடச் செய்திட்டான்.

வேத ரிஷிகளின் கவிதை என்று மகாகவி அருளிய பாடல்கள் ஸ்ரீ அரவிந்தருடைய நட்பால் மகாகவி பெற்றார் என்பது உண்மை. முனைவர் பிரேமா நந்தகுமார் அவர்கள் இதுபற்றி 40 பக்கங்கள் கொண்ட நீண்ட கட்டுரையை ஆங்கிலத்தில் வரைந்துள்ளார். மிகச் சிறப்பான கட்டுரை இது. அவரால் இக்கட்டுரை மேலும் விளக்கம் பெற்று நூல் வடிவம் பெற வேண்டும். தமிழிலும் அவர் இதுவகையில் ஒரு நூல் வரைய வேண்டும்.

ஸ்ரீ அரவிந்தர் உபநிடதம், பகவத்கீதை ஆகியவற்றை மொழி பெயர்த்தவர். மகாகவியும் உபநிடதங்கள் சிலவற்றையும் பகவத் கீதையையும் மொழி பெயர்த்திருக்கிறார்.

ஞானரதம் என்ற நூலை மகாகவி வரைந்திருக்கிறார். இதில் மகாகவி தத்துவ விகாரம் திறம்படச் செய்திருக்கிறார். சந்திரிகையின் கதையில் இது நிகழ்கிறது. இவற்றை யெல்லாம் துலக்கி ஒரு நூல் வரையப்பட வேண்டும்.

பாரதியார் வரைந்த சந்திரிகையின் கதை முற்றுப் பெறவில்லை. சந்திரிகை பிறப்பு வரையில் நிகழ்ந்தவை 100 பக்கங்கள் வருகின்றன. ஆனால் சந்திரிகையின் சிறுகுழந்தைப் பருவம் நடைபெறும் இடத்தில் கதை நின்று விட்டது. இதை எப்படி பாரதியார் முடித்திருப்பார் என்று அக்கதையை மூவர் எழுத முனைந்து தோற்றனர். இவருள் புதுமைப் பித்தனும் ஒருவர். மகாகவியின் படைப்புகளில் உண்மையான தோய்வுள்ள ஒருவர் இக்கதையைத் தொடர்ந்து வரைந்து முடிக்கவேண்டும்.

பாரதியாரும் வால்ட் விட்மனும் பற்றிப் பேராசிரியர் சச்சிதானந்தன் ஆங்கிலத்தில் மிகப் பெரிய நூல் வரைந்துள்ளார். இதனுடைய சுருக்கமான வடிவமேனும் தமிழில் கிடைக்கவேண்டும். பாரதியை ராபர்ட் ஃப்ராஸ்ட்டுடன் ஒப்பிட்டு வரையப்பட்ட ஆங்கில நூல் தமிழாக்கம் பெறவேண்டும். முனைவர் ஜான்சாமுவேல்

ஷெல்லியையும் பாரதியாரையும் ஒப்பிட்டு ஆங்கிலத்தில் வரைந்த நூல் தமிழாக்கம் பெறவேண்டும். புஷ்கினையும், பாரதியாரையும் ஒப்பிட்டுக் கமலா பத்மகிரீஸ்வரன் நல்லதொரு நூல் படைத்திருக்கிறார். திருமதி கமலா ருஷ்ய மொழியை முறையாகப் பயின்றவர். அவர் எழுதிய நூலின் சாரத்தைச் சிறு புத்தகவடிவில் அவர் அமைத்துத்தர வேண்டும். பாரதியும் வள்ளத்தோளும் என்ற சிற்பி பாலசுப்பிரமணியன் நூலும், சிதம்பரம் ரகுநாதன் வரைந்த பாரதியும் ஷெல்லியும் என்ற நூலும் சுருக்கமான வடிவத்தில் வரையப்படவேண்டும்.

வசன கவிதை என்ற தலைப்பில் இன்று குறிக்கப்பெறும் பாரதி படைப்புகள் வசனகவிதையாக எழுதப்படவில்லை. இவற்றுள் வால்ட் விட்மன், தாகூர் ஆகியோரது தாக்கம் தெளிவாகக் காணப்படுகிறது. இதுவகையில் பயனுள்ள ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும்.

பாரதி அகராதி ஒன்று சமைக்க வேண்டும். மகாகவி எளிய தமிழைக் கையாண்டார். ஆனால் பற்பல நேரங்களில் அவரது பாடல் அடிகள் விண்ணோக்கிப் பாய்ந்து வித்தாரம் பயில்கின்றன. மகாகவியின் சொற்களையும், சொற்றொடர்களையும் சில நேரங்களில் வாக்கியங்களையும் புரிந்துகொள்வது எளிதன்று. கள்ளையும் தீயையும் சேர்த்து நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்து என்று அவர் கூறியுள்ளார். இதன் உண்மைப்பொருள் என்ன?

"கொன்றிடும் என இனிதாய், இன்பக் கொடுநெருப்பாய் அனற்சுவை அமுதமாய்" என்கின்றார், இதன் பொருளென்ன?

"சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்து அங்கத் தேன் உண்ணுவாய் மனமே" என்கின்றார். இதன் பொருளென்ன?

"சீர் அவிரும் சுடர் மீனொடு வானத்துத் திங்களையும் சமைத்தே ஓர் அழகாக விழுங்கிடல்" என்கின்றார். இதன் பொருளென்ன?

இப்படிப் பலப்பல காட்டுகள் காட்டலாம். சொற்களில் சிலவற்றை எடுத்துக்கொள்ளுவோம். காணி நிலம் வேண்டும் என்று அவர் பாடியுள்ளார். காணி என்றால் எட்டு மனை, மனை ஒன்றக்கு 2400 சதுர அடி என்று சிலர் கணக்கிடுகின்றனர். இது தவறு, காணி என்றால் உரிமை என்ற பொருள். மஞ்சட் காணி,

காணியாச்சி, குடிக்காணி பாத்தியம் என்றெல்லாம் நாட்டு வழக்கில் வருகின்றன.

"அம்புக்கும், தீக்கும், விடத்துக்கும், நோவுக்கும் அச்சமில்லாதபடி" என்று மகாகவி பாடியிருக்கிறார். இங்கு அம்பு என்பது கணை, பாணம் என்று பொருள் தராது. அம்பு என்றால் தண்ணீர் என்று பொருள் அம்புஜம் என்பது தண்ணீரில் தோன்றும் தாமரையைக் குறிக்கும். "அம்பிலே சிலையை நாட்டி" என்று தொடங்கும் பழம்பாடல் கம்பரது பெருமையைப் போற்றும் பாடல். சிலை என்பது மலை. அம்பு என்பது நீர் நிரம்பியகடல். பாற்கடலை மந்தர மலையால் கடைந்தது இவ்வடியில் சுட்டப்படுகிறது. அம்புக்கும் தீக்கும் என்கின்ற போது நீருக்கும் நெருப்புக்கும் என்று பொருள்படும். நீரும் நெருப்பும் கூறப்பட்டுவிட்டபடியால், ஆகாயம், காற்று, பூமி என்றுள்ள பூதங்களையும் உபலட்சணத்தால் கொள்ள வேண்டும்.

"ஐயத்திலும் துரிதத்திலும் சிந்தி அழிவது என்னே" என்கிறார் மகாகவி. துரிதம் என்பது விரைவைக் குறிக்கும், என்ற அளவில் நிறைவு கொள்ளாமல், துரிதம் என்பது பாவம் என்றும் பொருள்படும் என்பதை உணரல்வேண்டும். துரித கூடிய த்வாரா என்று சங்கல்ப மந்திரத்தில் வரும்.

அளவை என்ற சொல் பிரமாண சாத்திரத்தைக் குறிக்கும். பலப்பல அளவை நூல்கள் தமிழில் பண்டு இருந்தன. இவ்விவரம் அறியாத பேராசிரியர் ஒருவர், "யான் சொலும் கவிதை என் மதி அளவை இவற்றினை" என்று வரும் மகாகவியின் சொற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தலைப்பட்டு மதியளவை என்பதை extent of intellect என்று தவறாக மொழிபெயர்த்திருக்கிறார்.

சீன தேசத்து ஞானியான கன்பூசியஸ் (Confucius) அருளிய மார்க்கத்தை மகாகவி கன்பூசிமதம் என்று குறிப்பிடுகிறார். சீன தேசத்து உச்சரிப்பையே (கன்பூஜி) மகாகவி தமிழிலும் தந்திருக்கிறார். இதை விளங்கிக்கொள்ள முடியாத மொழிபெயர்ப்பாளர், கன்பூஜி மதம் என்பதைக் கண்ணாமூச்சி விளையாட்டு என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதன் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள், பாரதியார் கையாண்ட சொற்களில் 82 சதவிகிதம் செவ்விய தமிழ்ச் சொற்கள் என்று அறிவித்திருக்கிறார். எடுத்துக் காட்டுக்கு ஒன்றைக் காண்போம். பாரத மாது தாமே

பணித்தன்று என்று பாரதியார் வேல்ஸ் நகர இளவரசருக்குக் கூறிய வரவேற்புப் பாடலின் தலைப்பில் கூறியிருக்கிறார். இதில் இரண்டு செய்திகள் நாம் கற்க வேண்டியவை உள. பாரத மாது தானே என்று சொல்லாமல், பாரத மாது தாமே என்று மகாகவி மரியாதைப் பன்மையில் பேசியது நினைவில் கொள்ளத் தக்கது. பணித்தன்று என்று சொன்னால் பணித்தது என்று பொருள்படும்.

வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிய பாடல் இப்படித் தொடங்குகிறது:

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக்கொடுத்தல் உயர்ந்தன்று அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

இங்கு இழிந்தன்று என்று வரும் சொல்லிற்குப் பொருள் இழிந்தது என்பதாம். அதேபோன்று உயர்ந்தன்று என்ற சொல்லிற்குப் பொருள் உயர்ந்தது என்பதே.

மகாகவி, பாரதமாது தாமே பணித்தன்று என்று கூறும்போது, பணித்தன்று என்பதற்குப் பணித்தது என்றே பொருள்படும். இதை விபரீதமாகப் புரிந்து கொண்டு அன்பர் ஒருவர் பணித்தது அன்று என்று பொருள் கொண்டு அதன் அடிப்படையில் பலபக்கங்கள் தவறான விளக்கம் அளித்திருக்கிறார்.

பாரதியின் சில வாக்கியங்களுக்கு என்ன பொருள் என்று நமக்கு விளங்கவில்லை. அல்லினுக்குப் பெருஞ்சுடர் என்றும் கல்லினுக்குள் அறிவொளி என்றும் புல்லினில் வைரப்படை என்றும் பாரதியார் எவற்றைக் குறிக்கின்றார் என்பது தெளிவுபடுத்தப்படல் வேண்டும். இப்படிப்பட்ட சொற்றொடர்களுக்கும், வாக்கியங்களுக்கும் பட்டியல் போட்டு ஆதாரத்தோடு விளக்கம் சமைத்தல் வேண்டும். சொற்களுக்கும் காரண, தூல, சூக்கும சரீரங்கள் உண்டு என்றும், அம்மூன்று நிலைகளிலும் மகாகவியின் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, என்றும் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், சொல்லெடுத்துச் சூக்குமத்தில் விட்டெறிந்து சுட்டபழம் உதிர்த்தவர் நம் மகாகவி. ஆகவே, மகாகவியின் படைப்புகளுக்கான சொற்பொருள் அகராதி, சொற்பொருள் அடைவு, பெயர்ச்சொல் அகராதி, அடைவு ஆகியவை உருவாக்கப்படல் வேண்டும். இதுவகையில் ஷேக்ஸ்பியர், மில்டனார்

போன்ற மேனாட்டுப் புலவர்களைப் புரிந்து கொள்வதற்கென்று சமைக்கப்பட்ட அகராதிகள், அடைவுகள் ஆகியவற்றையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஞானிகள், விஞ்ஞானிகள், அருளாளர்கள், கவிகள், கட்டுரையாளர்கள், சிறுகதை, நாவல் ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், வரலாற்றில் இடம் பெற்றவர்கள், இதிகாச, புராண பாத்திரங்கள், நண்பர்கள் என்றுள்ள பல்லோரைப்பற்றியும் மகாகவி செய்திகள் தந்திருக்கிறார். இதுவகையில் ஒரு பெயர்ச்சொல் அகராதியை உருவாக்கினால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அப்பட்டியலில் இடம் பெறுவர். வெறும் பட்டியலாக அமைக்காது, அவரவர்களைப் பற்றிய முக்கியமான தகவல்களையும் உருவாக்கித் தருதல் மிகப் பயனுள்ள பணியாகும்.

பாரதி நூற்றாண்டையொட்டிப் பாரதி ஆய்வாளர் சீனி. விஸ்வநாதன் மகாகவி பாரதி நூற்பெயர்க்கோவை என்றொரு தொகுப்பு நூலை வெளியிட்டார். பாரதியாரே எழுதியவை, பாரதியாரைப் பற்றி எழுதப்பட்டவை என்றுள்ள 370 நூல்களுக்கான ஆதாரபூர்வமான செய்திகள் இக்கோவையில் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கான காலம் 1908 ஜனவரி முதல் 1980 டிசம்பர் முடிய இதையடுத்து சீனி, விசுவநாதன், பாரதி நூல்கள் விவரக் கோவை என்ற தொகுப்பு நூலையும் பதிப்பித்திருக்கிறார். இதில் 275 நூல்கள் விவரங்களுடன் இடம்பெற்றிருக்கின்றன. இந்நூலில் 1981 முதல் 1985 முடிய உள்ள காலப் பகுதியில் பிரசுரமாகியுள்ள நூல்களின் முக்கியமான விவரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1983இலிருந்து இன்று வரை குறைந்த பட்சம் 150 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றின் விவரங்கள் வரிசைக்கிரமமாக இன்னமும் வெளிவரவில்லை.

ஆய்வியல் நிறைஞர் (M.Phil), முனைவர் (Ph.D.) ஆகிய பட்டத்திற்கான ஆய்வேடுகள் ஒருசில அளிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் அச்சுருப் பெறவில்லை. அச்சில் வாரா ஆய்வேடுகளின் படிகளையும் பெற்று எவ்வெத் தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றிருக்கின்றன என்று கண்டறியப்படவேண்டும்.

1982 வரையிலும் ஷேக்ஸ்பியரைப்பற்றி வெளியான நூல்கள் ஏறத்தாழ 1,50,000 என்று கணக்கிட்டிருக்கின்றன. மேலும், ஆண்டுதோறும் ஏறத்தாழ 3000 நூல்கள் வெளியிடப்படுகின்றன என்றும் அறிகிறோம். இந்நூல்கள் உலகின் வெவ்வேறு நாடுகளில்

வெளிவருபவை. இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் வாழ்கின்றனர். பலப்பல தமிழ்ச் சங்கங்கள் அங்கங்கும் தோற்றுவிக்கப் பட்டு நன்றாகச் செயல்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியாக் கண்டத்திலும், நியூசிலாந்திலும் தமிழ்ச்சங்கங்கள் உள. அவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் வரைகின்றனர். அக்கட்டுரைகளில் பல பாரதி ஆய்வு பற்றியவை. எண்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழறிந்த ஜெர்மானியர் - தம்மைப் பைத்தான் சாத்திரியார் என்று அறிவித்துக் கொண்டவர் - பாரதியாருக்கு ஜெர்மனியில் விழா எடுத்தார். தமிழில் பாரதியைப் பற்றி அவர் கட்டுரைகள் வரைந்திருக்கிறார். இவை ரோஜா முத்தையா ஆய்வு நூல் நிலையத்தில் காக்கப்பெற்று வருகின்றன.

இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பலப்பல கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவருகின்றன. உலகில் உள்ள தமிழ்ச்சங்கங்கள் அனைத்தோடும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்புகொண்டு அச்சங்கங்களது ஆக்கப் பணிகளைப்பற்றித் தகவல்கள் சேகரித்து வைக்கவேண்டும். இது தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். கேட்ட அளவிலேயே இனாமாகவே தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அவர்கள் நூல்களையும், இதழ்களையும், அவை போன்றவற்றையும் அனுப்பி உதவுவர். யாழ்ப்பாணம், கொழும்பு, மலேசியா, சிங்கப்பூர், போன்ற நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களும் கேட்ட உடனே அனைத்தையும் வழங்கச் சமைவாயிருக்கின்றனர். மூல பண்டாரம் வழங்குகின்றான், வந்து முந்துமினோ!

ஷேக்ஸ்பியரை அனைவரும் அறிந்துபோற்ற வினா விடையாக நூல்கள் சமைத்திருக்கிறார்கள். பாரதி படைப்புகள் பற்றி வினா - விடை நூல்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். ஓராயிரம் வினா-விடை கொண்ட தொகுதிகள் பத்து வெளியிட முடியும். சிறுபிள்ளைகள் முதல் பேரறிஞர்கள் வரை பயன் பெறக்கூடிய வகையில் இத்தொகுதிகள் வெளிவரல் வேண்டும்.

பாரதியார் பாடல்கள் பற்றியும், உரை நடைப்படைப்புகள் பற்றியும் அரசியல், பொருளாதாரம், சமயம், நாகரிகம், பண்பாடு, உளவியல், அறிவியல் என்றுள்ள துறைகளில் வினா-விடைப் பனுவல்கள் வரையப்பட வேண்டும். *The Illustrated Poets* என்ற வரிசையில் பாரகன்புக்ஸ் லிமிடெட், லண்டன், கவிஞர்களைப்பற்றி அற்புதமான படங்களோடு சிறுசிறு கையடக்க நூல்கள் வெளியிடுகின்றனர். ஷேக்ஸ்பியர் பற்றி 76 பக்கங்களில் அவர்கள் வெளியிட்டிருக்கும் நூலை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

தொலைக்காட்சி என்ற சாதனம் மிகமிகப் பயனுள்ள சாதனமாகும். இதனை எங்ஙனம் பயன்படுத்தக் கூடாதோ அங்ஙனமே தற்போது மிகப்பெரும் அளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதில் நிகழ்த்தப் பெறும் புதிர் நிகழ்ச்சிகளைப் பற்றி என்னவென்று சொல்வது?

மகாகவியை மையமாக வைத்து வாரம் ஒரு புதிர் நிகழ்ச்சி நடத்தப் பெறல் வேண்டும். அரை மணியிலிருந்து ஒரு மணி வரை இந்நிகழ்ச்சிகளுக்கு நேரம் ஒதுக்கலாம். இங்ஙனம் ஒதுக்கினால் இந்நிகழ்ச்சியைப் பதினைந்தாண்டு காலத்துக்குத் தொடர்ந்து நடத்துவதற்கான சரக்கு மகாகவியிடம் உண்டு. எளிமையான முறையில் தொடங்கிச் சீராகமேம்படுத்தலாம். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்கூட இந்நிகழ்ச்சிகளை நடத்துதல் நல்லது. பாரதிவிழா எடுக்கும் அன்பர்கள் இவ்வகையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். மாதிரிக்கான வினா-விடைத்தாள் இணைப்பு (1) இல் தரப்பட்டுள்ளது.

பாரதியாரின் ஆங்கிலப் படைப்புகள் பெருமளவு நூல்வடிவம் பெற்றிருக்கின்றன. இதிலும் சில விடுபாடுகள் உண்டு. அவற்றையும் சேர்த்து ஒரு முழுமையான நூல் உருவாக்கப்பட வேண்டும். இதில் ஆங்கிலப் படைப்புகள் பற்றிய செய்திகள் விவரமாகக் குறிக்கப்பெறல் வேண்டும். ஆர்யா-வில் வந்த பாரதியாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை ஸ்ரீ அரவிந்தர் செய்ததாகக் கூறப்பட்டு அதுவகையில் ஒரு நூலும் வெளிவந்திருக்கிறது. நம்மாழ்வார், ஆண்டாள், போன்ற தெய்வீகக் கவிஞர்களின் தமிழ்ப் பாடல்களைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு ஸ்ரீஅரவிந்தருக்குத் தமிழறிவு இல்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறலாம். மேலும் ஆர்யா பத்திரிகையில் வெளிவந்த பாரதி மொழிபெயர்ப்புப் பாடல்கள் சிலவற்றிற்கான கையெழுத்துப் படிகள் பாரதியார் கையெழுத்திலேயே உள்ளன. இவை சீனி. விஸ்வநாதன் வசம் உள்ளன. மாதிரிக்காக ஒன்றை மட்டும் நான் மின்படி எடுத்து வைத்திருக்கிறேன்.

ராஜாஜி அவர்கள் பாரதி பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். அவர் பாரதியாரைச் சில முறை சந்தித்தும் இருக்கிறார். சி. விஸ்வநாதன் அவர்கள் எழுதிய நூலில் ராஜாஜி, பாரதி தொடர்பான செய்திகள் ஆங்கிலத்தில் தரப்பட்டிருக்கின்றன. இச் செய்திகளும் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

பாரதியார் சுயமாகவும் மொழிபெயர்ப்பாகவும் சிலவற்றை ஆங்கிலத்தில் படைத்திருக்கிறார். மொழியாக்கம் குறித்து நமக்குக்

கிடைக்கக் கூடிய ஆதாரமான நூல் சி. விஸ்வநாத ஐயரால், Bharati as a Translator என்ற தலைப்பில் வெளிவந்திருக்கிறது. இந்நூல் மொழிபெயர்ப்போடு மூலமும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலை ஆதாரமாக வைத்து முதல் கட்டமாகப் பாரதியாரின் ஆங்கில மொழி பெயர்ப்புத்திறன் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். மொழி பெயர்ப்பில் எவ்வகைக் கோட்பாட்டைப் பாரதியார் பின்பற்றினார் என்பதும், அவர் காலத்தில் ஆங்கில மொழி பெயர்ப்புகள் எங்ஙனம் அமைந்திருந்தன என்பதும் அவரது மொழியாக்கத்திற்கும், தற்கால மொழியாக்கத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பற்றியும் விரிவான ஆய்வு நூல் தக்காரால் வரையப்பட வேண்டும்.

சுயமாகவே அவர் வரைந்த ஆங்கிலப் படைப்புகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். பாரதியாரது ஆங்கிலப் படைப்புகளில் நம்நாட்டு, மேனாட்டுப் புலவர்களின் தாக்கம் எம்முறையில் அமைந்திருக்கிறது என்பதும் வெளிப்படுத்தப் படவேண்டும்.

பாரதியார் சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா (சென்னை), இந்தியா (புதுச்சேரி), பால பாரதி என்ற ஆங்கில வாராந்தரி, பாலபாரதா அல்லது யங் இந்தியா என்ற பெயர் மாற்றம் பெற்ற ஆங்கிலப் பத்திரிகை, கர்மயோகி (மாத இதழ்), சூர்யோதயம் (மாத இதழ்), தர்மம் (மாத இதழ்), சுப்பிரமணிய சிவா தோற்றுவித்த ஞானபானு, சென்னையில் வெளிவந்த தி ஹிண்டு, அரவிந்தரின் ஆர்யா, அன்னி பெசன்ட் அம்மையாரின் நியூ இண்டியா, காமன் வீல், தி மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் என்ற ஆங்கில இதழ் முதலிய பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். சித்ராவளி என்ற பத்திரிகையை வெளியிடப்போவதாக அறிவித்தார். ஆனால் அப்படி பத்திரிகை வெளிவரவில்லை. இதே போல் அமிர்தம் என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்க அவர் திட்டமிட்டார். அம்முயற்சி கைகூடவில்லை. சுதேசமித்திரன் காரியாலயமே கதைகளுக்குப் பெரும்பங்கு அளித்து நடத்திவந்த கதா ரத்நாகரம் என்ற மாதப் பத்திரிகையிலும் பாரதியார் கதைகள் இடம் பெற்றன். இவை தவிரத் திரு வி.க. அவர்களின் நவசக்தி ஆண்டு மலரிலும், காரைக்குடியினின்றும் பிரசுரமான தன வைசிய ஊழியன் என்ற வாரப் பத்திரிகையிலும், சுப்பிரமணிய சிவாவின் பிரபஞ்சமித்திரன் இந்திய தேசாந்திரி ஆகிய பத்திரிகைகளிலும் பாரதியாரின் பாடல்களும், கட்டுரைகளும் வெளிவந்தன.

சக்கரவர்த்தினியில் ஷெல்லிதாஸ் என்ற புனைபெயரில் எழுதிவந்த பாரதி இந்தியா பத்திரிகையில் ஒரு பாடலில் தம்மை வேதாந்தி என்று அறிவித்திருந்தார். பாரதியாரின் புனைபெயர்கள் சாவித்திரி, நித்தியதீரர், உத்தம தேசாபிமானி, சக்திதாஸன், காளிதாஸன், பிஞ்சுக் காளிதாஸன், onlooker ஆகியவையாகும். இங்கு ஒரு செய்தியைச் சொல்லவேண்டும். பாரதியாருடைய எழுத்துக்கள் அனைத்தும் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. இன்றுங்கூடக் கிடைக்கவில்லை.

இரங்கூனில் வெளிவந்த சுதேச பரிபாலினி என்ற பத்திரிகை பாரதியை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது. சென்னையிலிருந்து வெளிவந்த இந்துசாதனம் என்ற பத்திரிகை பாரதியை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறது. இப் பத்திரிகைகளில் பாரதிபற்றி வெளிவந்த செய்திகள் நமக்குச் சரிவரக் கிடைக்கவில்லை. கல்கத்தா நூலகத்தில் காப்பாற்றி வைக்க்ப்பட்டிருக்கும் இந்தியா பத்திரிகை குறையுடையதாகவே இருக்கிறது. அமிர்த குணபோதினி என்ற பத்திரிகை பாரதியாரை வெகுவாக மதித்த ஒரு பத்திரிகையாகும்.

பெ. சு. மணி எழுதிய பத்திரிகையாளர் பாரதியார் என்ற நூலில் பல அரிய தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 1909 கிருஷ்ண ஜெயந்தி நாளில் புதுச்சேரியில் *விஜயா* என்ற பத்திரிகை தோன்றியது. இது தொடங்கிய ஓரிரு மாதங்களிலேயே பாரதியார் இதற்கு ஆசிரியரானார். பாரதியின் பாலபாரத், சகோதரி நிவேதிதைக்கு அனுப்பப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கான ஆதாரத்தைப் பெ.சு. மணி தந்திருக்கிறார். பாரதியார் எழுத்துக்கள் - சில புதிய கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் பெ.சு. மணி ஒரு நூல் வரைந்திருக்கிறார். இந்நூலில் பாலபாரதா தலையங்கக் குறிப்புகளோடு பாரதிவரைந்த இரண்டு கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. இவை அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தல் வேண்டும். சூர்யோதயம் புதுச்சேரியில் வெளியிடப்பட்டதால் தமிழ்த் தலைப்பின் கீழ் L, AURORE என்ற பிரெஞ்சு மொழிபெயர்ப்பும் இடம் பெற்றுள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும், பாரத நாட்டின் பிற மாநிலப் பத்திரிகைகளிலும் பாரதியார் பற்றிய செய்திகள் அதிக அளவில் இருக்கக் கூடும். அவற்றை முறையாகத் தேடும் முயச்சி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

பாரதியாரின் தந்தை நல்ல இசை மேதையுமாவார். தாய்வழிப் பாட்டனாரும் நல்ல இசையறிவும் *தமிழறிவும்* பெற்றவர்.

இவர்களின் வழித் தோன்றலாகிய பாரதியார் வியக்கத்தக்க இசையறிவும் அற்புதமான குரல்வளமும் பெற்றவராவார். பாரதியின் சொற்கள் கொண்டே இதை வருணிக்கப் புகுந்தால் பாரதியாருக்குப் பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளும் வசமாகியிருந்தன. அவர் பாடிய பாடல்கள் அனைத்துமே இசைப் பாடல்கள் என்று கொள்ளத்தக்கன. பலவற்றிற்கும் இராகம், தாளம், சுரக் குறிப்பு ஆகியவற்றை அவர் தந்திருக்கிறார். பாரதியை இசையோடு இணைத்து ஒரு சில நூல்கள் வந்திருக்கின்றன. அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆனந்த விகடனில் சுரப்படுத்தப்பட்ட பாரதி பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. பாடல்களுக்குச் சுரம் அமைத்துத் தந்தவர் அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்களாவார். இப்பாடல்கள் நூல்வடிவில் விரைவில் வெளியிடப்பட வேண்டும். பாரதியின் இசை நாட்டம் பற்றிச் சகுந்தலா பாரதியின் என் தந்தை என்ற நூலில் காணலாம்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை பி.எஸ். இராமையா அவர்கள் நாடகமாக அமைத்துத் தந்தார். எஸ்.வி. சகஸ்ரநாமம் என்ற சிறந்த நடிகர் அந் நாடகத்தைப் பலமுறை அரங்கேற்றியிருக்கிறார். இவ் வகையில் பாரதியாரின் குயில் பாட்டையும் நாடகமாக்க வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் அதில் பங்கு கொள்ளல் வேண்டும். கண்ணன் பாட்டையும் அற்புதமான நாடகக் காட்சிகளாக அமைக்க முடியும். தொலைக்காட்சி நிறுவனத்தார் இதுவகையில் நல்லமுறையில் நாடகங்களை அமைக்க வேண்டும். சென், பெருமாள் எழுதிய பாரதியாரில் மூன்று நாடகங்கள் ஒரு நல்ல முயற்சி, குயில்பாட்டு நாடகம் பற்றி, பார்வை என்ற தலைப்பில் சி.வே. பாலசுப்பிரமணியம் எழுதிய பாடல் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பாரதியாரின் நகைச்சுவை பற்றித் தனி ஒரு நூல் உருவாக்கப்பட வேண்டும். துணுக்குகளாக இதுவரையில் பல செய்திகள் வெளிவந்திருக்கின்றன. ஒரு சமயம் பாரதியாரின் உறவினரான எஸ். லக்ஷ்மணய்யர் (சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரியின் துணைமுதல்வர்) பாரதியார் வீட்டுக்கு வந்தார். அன்று அமாவாசை, பாரதியார் அவரைக் காலையில் காபி, பலகாரம் தம்முடன் சாப்பிடுமாறு அழைத்தார். லக்ஷ்மணய்யர் அமாவசையாதலால் வெறும் காபி மட்டும் போதும் என்று கூறினார். உடனே பாரதி, ஏன் அத்திம்பேரே உங்கள் பிதிருக்கள் என்ன anti solid பிதிருக்களா? என்று கேட்டார். இச் சம்பவம் சி. விஸ்வநாத ஐயர் எழுதிய கவி பிறந்த கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே போன்று அகட விகட சாஸ்திரி தர்க்கம் A strain of comedy என்றொரு உரையாடலை வெளியிட்டிருக்கிறார். இது வேறு எந்நூலிலும் வெளியாகவில்லை. இதைப் `புதுவையில் பாரதியார்' என்ற நூலைச் சமைத்த வஸந்தானந்தா அந்நூலின் பக்கங்கள் 160 முதல் 163 வரை தந்திருக்கிறார். இப்படி பல துண்டு துணுக்குகள் அங்கங்கும் சிதறிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டித் தனி நூலாக வெளியிட வேண்டும்.

இனி, பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய எதிர்கால ஆய்வுகளை மேற்கொள்ளும் முறைமையினைக் காண்போம்.

3. பாரதி வாழ்க்கை பற்றிய எதிர்கால ஆய்வுகள்

மகாகவி பாரதியார் வாழ்க்கையில் தொடர்புடையவர்கள் அனேகம் பேர் இருந்துள்ளனர். அழகிய சிங்கப் பெருமாள், அட்வனே, அன்னிபெசன்ட், ஸ்ரீ அரவிந்த கோஷ், கந்தசாமிக் கவிராயர், கருணாகர மேனன், காந்தியடிகள், சங்கர்லால் வல்லபாய் டாரவாலா, சிவராம மாகாதே பரஞ்சலே, மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார், ஜி. சுப்பிரமணிய ஐயர், சியாம சுந்தர சக்கரவர்த்தி, இந்தியா பத்திரிகை ஆசிரியர் எம். சீநிவாசாச்சாரியார், ஸி.வி. சாமிநாத ஐயர், சுரேந்திரநாத் பானர்ஜி, செண்ட் நகல்சிங், திரு வி.க., எஸ். என். திருமலாச்சாரியார், நரேந்திரநாத் சென், ஜி.ஏ. நடேசன், மார்கரட் நோபிள் என்னும் சகோதரி நிவேதிதை, பாபு மதிலால் கோஷ், ஏ.சி. பார்த்தசாரதி நாயுடு, பாலகங்காதர திலகர், பாஸ்கர பல்வந்த் போபட்கார், பிரதிவீஸ சந்திர ராய், பிரம்மபாந்த உபாத்யாயா, பூபேந்திர நாதர், பண்டித மாதவராவ் சப்ரே, மாதவன் நாயர், முஸ்தபா கமால் பாஷா, மக்ளூர், மோதிலால் கோஷ், ரங்கசாமி ஐயங்கார், ராஜாஜி, லாலா ஜஸ்வந்த்ராய், விபினசந்திர பாலர், மு. வீரராகவாச்சாரியார், கோ. வைத்தியலிங்கம் பிள்ளை, W.T.Steed, H.M.ஹைஹண்டுமன், ஷியாம்ஜிகிருஷ்ண வர்மா, போன்றவர்களைப் பற்றி மகாகவி குறிப்பிட்டிருக்கிறார். மேலே தொகுக்கப்பட்ட பெயர்கள் முனைவர் இறையரசன் தொகுத்தவை. இன்னும் சில பெயர்கள் விடுபட்டிருக்கலாம். இவ்வாசிரியர்கள் பற்றிய குறிப்புக்கள் வரையப்பட வேண்டும்.

மகாகவி போற்றிய நம்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள், கவிகள் ஆகியோர்பட்டியல் சமைக்கப்பட வேண்டும். அவ்வக் கவிஞர்கள் பற்றிய குறிப்பு வரையப்பட வேண்டும். இப்பெரியோர்களைப் பாரதியார் ஏன் பாராட்டினார் என்று ஒரு மிகப் பெரியநூல் வரையப்பட வேண்டும். பாரதியாரும் ஷெல்லியும், பாரதியாரும் புஷ்கினும், பாரதியாரும் ரூமியும், பாரதியாரும்

மில்டனாரும், பாரதியாரும் ப்ரௌனிங்கும், பாரதியாரும் ஃப்ரான்ஸிஸ் தாம்சனும், என்ற தலைப்புகளில் நான் வரைந்த கட்டுரைகள் வழிவழி பாரதி என்ற என் நூலில் இடம் பெற்றுள்ளன.

மகாகவிக்குப் பாரதி என்ற பட்டம் எங்கு, யார் கொடுத்தார் என்பதில் முரண்பட்ட கருத்துக்கள் உள. ஆக்கூர் அனந்தாச்சாரியார் புலவர் கூடிய பெருஞ்சபையிலே கொடுக்கப்பட்ட அடிகளைக் கொண்டு பாடல்களை அழகுறப் பூர்த்திசெய்தார் என்றும், இது பாரதியின் 11ஆவது வயதில் நிகழ்ந்தது என்றும், அவருக்குப்பாரதியார் என்ற பட்டத்தைப் புலவர்கள் தந்தனர் என்றும் கூறுகிறார்.

சுத்தானந்த பாரதியாரும் இக்கருத்தை அனுசரித்து மகாகவிக்கு 1893-ஆம் ஆண்டில் பாரதி என்ற பட்டம் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார்.

சக்திதாசன் சுப்பிரமணியன் 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செலக்ஷன் பரீட்சையில் தோற்றுவிட்ட பாரதியை விருதை சிவஞான யோகியார் ஏளனம் செய்ததாகவும், யோகியார் விடுத்த சவாலை ஏற்று அன்று மாலையிலேயே கல்வியின் திறன் என்ற தலைப்பில் பாரதியார் மிகச்சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார் என்றும், அதைக் கேட்ட யோகியார் அன்றைய தினமே குருகுகதாஸப் பிள்ளை என்பவரது வீட்டில் மகாகவிக்குப் பாரதி என்ற பட்டம் சூட்டினார் என்றும், அப்போது பாரதிக்கு 14 வயது என்றும் கூறுகிறார்.

தி.ஜ.ர. என்பவர், வாழை, கமுகு இரண்டையும் வைத்துக் கேட்ட அளவிலேயே ஒரு பாடல் பாடினார் என்றம் அதைக் கேட்டுப் பரவசமுற்ற பண்டிதர், மகாகவி பெற்ற பாரதி பட்டம் பொருத்தம்தான் என்றும் கூறிவிட்டு இந்நிகழ்ச்சி பாரதியின் 13ஆம் வயதில் நிகழ்ந்தது என்றம் கூறுகிறார். மேலும் அவர், இந்நிகழ்ச்சிக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு பாரதி பக்தர்கள், அபிமானிகள் மற்றும் அவர் போன்றோர் ஒரு சிறப்பான விழாநடத்தி அவருக்குப் பாரதி என்ற பட்டம் சூட்டினர் என்கிறார்.

வ.ரா. அவர்கள் எட்டயபுர சமஸ்தான வித்துவான்கள் அப்பட்டத்தை மகாகவிக்கு அளித்தனர் என்கிறார்.

சோமசுந்தர பாரதியாருக்கும், சுப்பிரமணிய பாரதியாருக்கும் ஏககாலத்தில் பாரதி என்ற பட்டம் வழங்கப்பட்டதாக ஒரு செய்தி நிலவி வருகிறது.

எந்த இடத்தில், எந்த ஆண்டில், யாரால் பட்டம் வழங்கப்பட்டது? இது வகையில் கவி பிறந்த கதை பக்கங்கள் 79-80இல் உள்ள அனுபந்தம் இரண்டில் உண்மைநிலை விளக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நல்லவகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுத் தெளிவான முடிவு அறிவிக்கப்படவேண்டும்.

பாரதியார் மெட்ரிகுலேஷன் செலக்ஷன் தேர்வில் தோற்றுவிட்டது எந்த ஆண்டில் நிகழ்ந்தது என்பது பற்றியும் தெளிவான ஆய்வு நமக்குத் தேவை.

அடுத்து, பாரதியார் எவ்வளவு ஆண்டுகள் காசியில் வாழ்ந்துவந்தார் என்பது பற்றித் தெளிவான செய்தி நமக்கு வந்துசேர வேண்டும்.

காசியில் எந்தக் கல்லூரியில் பாரதி பயின்றார்? இந்து யுனிவர்ஸிட்டியில் படித்தார் என்று ஒருசிலர் முழங்குகின்றனர். அப்படி ஒரு பல்கலைக்கழகம் அந்நாளில் தோன்றவே இல்லை. அவர்படித்தது ஜெய நாராயணா கல்லூரியில்.

பாரதி ஏன் மீசை வைத்துக் கொண்டார் என்பது பற்றிப் பல ஊகங்கள் எழுந்துள்ளன. சரியான காரணத்தைப் பாரதியே அறிவித்திருக்க ஊகங்களுக்கு ஏதும் இடமில்லை.

பாரதி ஏன் தலைப்பாகை கட்டிக் கொண்டார்? இதுபற்றியும் பற்பல ஊகங்கள் உள. உண்மைக் காரணம் என்னவென்றால் இள வயதிலேயே அவருக்கு வழுக்கை விழுந்துவிட்டது. தலைப்பாகை இல்லாத பாரதியாரின் உருவத்தைக் கற்பனை செய்து சித்திர பாரதியில் காட்டப்பட்டிருக்கும் படத்தைக் காண்க.

காசியிலிருந்து பாரதியார் எட்டையபுரம் திரும்பக் காரணமாயிருந்தவர் எட்டையபுரம் அரசரே. ஆனால், காசிக்கு வந்த அரசர் தம்முடனேயே அவரை அழைத்து வந்தார் என்றும், அப்படி இல்லை, அரசர் எட்டையபுரத்திலிருந்து அழைப்புவிடப்பாரதி வந்து சேர்ந்தார் என்றும் கூறப்படுகின்றன. இப்படிப்பட்ட சில வினாக்களை எழுப்பலாம். சீனி. விசுவநாதன் போன்றார் சிலவற்றிற்கு ஆதாரபூர்வமான விடைகளைத் தந்திருக்கின்றனர் என்றாலும், அத்தகவல்கள் மக்களைச் சென்றடையவில்லை.

நூல் வரைவோரும் பழகிப்போன, தவறான செய்திகளையே தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். மகாகவிக்கென்று ஓர்

ஆதாரபூர்வமான தன்விவரக்குறிப்புச் சமைக்கப்பட்டு ஒவ்வொரு பதிப்பாளருக்கும் அனுப்பப்பட வேண்டும். அதற்கு மாறான செய்திகளை வெளியிடுதல் கூடாது என்று ஓர் அரசாணையே வெளியிட வேண்டும் என்பது என் கருத்து.

உலகளவில் பாரதியார் ஏற்கப்பட்டிருக்கிறார் என்பதையறிந்து நாம் பெருமைப்படுகிறோம். வெளிநாட்டில் 1995இல் பதிப்பிக்கப்பட்ட மெர்ரியம் வெப்ஸ்டர் இலக்கியக் கலைக் களஞ்சியம் (Merriam Websters Encyclopaedia of Literature) பாரதியார் வரலாற்றைச் சுருக்கமாகத் தந்திருக்கிறது. இதனால் பாரதியாருக்கு அகில உலக இலக்கிய அந்தஸ்து கிட்டியிருப்பது கண்கூடு. ஆனால் இவருக்குச் சாவு யானையால் ஏற்பட்டது என்ற தவறுதலான கருத்தே இதிலும் காணப்படுகிறது. இது தவறு என்று நம் பல்கலைக்கழகங்கள் சுட்டிக்காட்டி நூல் வெளியிட்டோருக்கு அறிவிக்க வேண்டும்.

இத்தகைய தவறு நிகழக் காரணம் என்ன? இதற்கான காரணத்தைப் பாரதியாரின் இளவல் தாம் வரைந்த கவி பிறந்த கதையில் கூறியுள்ளார். அவர் கூறுவதாவது: கல்கத்தாவில் பிரசுரமாகும் மாடர்ன் ரெவியூ என்ற பிரபல பத்திரிகையில் 1955 ஆம் வருஷம் நவம்பர் மாத வெளியீட்டில் திரு நரேந்திர தேவ் என்பவர் எழுதியிருக்கிறார்.

"Bharati sacrificed his life to save a deadly frightened girl from the attack of a mad elephant who ran amuck on the street, the girl was saved by him, but he himslef could not escape his rage of that mad beast who killed him on the spot.

மேலும் அவர் கூறுவதாவது: தமிழகத்தில் பிரசுரமாகியிருக்கும் சிறுகுழந்தைகள் பாடப்புத்தகங்களிலேயே யானை தள்ளிக்காயமுற்று அதனின்றும் மீளாமலேயே பாரதியார் இறந்ததாக எழுதியிருக்கும்போது, பலநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள வங்கத்தில் வசித்த திரு நரேந்திரதேவ், யாரோ சொல்லக் கேட்டு, மேற்கூறியவாறு எழுதியிருப்பது ஆச்சரியம் அன்று.

பாரதியார் பாடல்கள் எவ்வெச் சூழ்நிலையில் தோன்றின என்று ஒரு சிலர் கூறியுள்ளனர். தங்கம்மா பாரதி, வஸந்தாணந்தா, யதுகிரி அம்மாள் வரைந்த நூல்களில் விவரங்கள் சிதறிக் கிடக்கின்றன. மேலும், எவ்வெச் சூழ்நிலையில் பாடல்கள் தோன்றின என்பதற்குச் சான்றுகள் மகாகவியின் கட்டுரைகளிலேயும் காணக் கிடக்கின்றன. மஹேசகுமாரசர்மா போன்றோர் வேண்டுகோளின்

பேரில் பாரதியார் மொழிபெயர்ப்புகள் செய்திருக்கிறார். புதியனவாகவும் புனைந்திருக்கிறார். சிதறிக் கிடக்கும் இத்தகவல்களை ஒன்றாகத் திரட்டி ஆதாரங்களோடு அவற்றை வெளியிடல் வேண்டும்.

சீனிவாச சாஸ்திரியார், மறைமலை அடிகள் போன்றோர் பாரதியாரை மதிக்கவில்லை, மறை. திருநாவுக்கரசு நாளடைவில் தம் தந்தையாரின் மனப்போக்கை மாற்றியிருக்கிறார். அதே போன்று பள்ளியகரம் நீ. கந்தசாமிப்பிள்ளை பாரதியாரைப் புரிந்துகொள்ளாமல் இருந்தார். பாரதி மீது அவருக்குத் தீவிரப்பற்று ஏற்படும்படி செய்தவர் அமரர் திருலோக சீதாராம் ஆவார்.

பாரதியாரைப் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்களைச் சில நூல்கள் தந்திருக்கின்றன. தங்கம்மாள் பாரதி எழுதிய எந்தையும், தாயும், தேவி வஸந்தானந்தா வரைந்த புதுவையில் பாரதியார், யதுகிரி அம்மாளின் பாரதி நினைவுகள் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

தங்கம்மாள் பாரதி பாரதிதாசனைப் பற்றிக் கூறுவதாவது: இன்று புரட்சிக் கவிஞர் என்று புகழப்படும் பாரதிதாசன், அன்று வாத்தியார் சுப்புரத்தினம். கையில் தங்கக் காப்புடன், உருமாலைப்பட்டு அங்கவஸ்திரம் தோளில் துலங்கவும், நான் தமிழன் என்ற எக்களிப்பும் இறுமாப்பும் விழிகளில் மிதக்கத் தோன்றுவார். பராசக்தியை அவர் போற்றிய பாட்டு இப்போது அவர் கவிதைத் தொகுப்பில் காணப்படவில்லை. நாட்டின் இழிநிலையைக் கண்டு கொதிக்கும் கவிஞனின் உள்ளத்தை அந்தப் பாட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

பாரதிதாசன் பாடிய நொண்டிச் சிந்து மெட்டில் அமைந்த பாடலின் ஒரு பகுதி மட்டும் இங்கே தரப்படுகிறது. மற்றவற்றைத் தங்கம்மாள் நூலில் காண்க.

கெஞ்சுவதன் பயனோடி - அம்மா
கேடுவந்து சேருவதுன் தயவோடி - எனை
மிஞ்சவிட மனமில்லையோ - நாங்கள்
மே நிலையி லிருந்ததை அறியாயோ - இந்த
மஞ்சிலுயர் வானமறிய - இந்த
மண் அறியத் தேவி உன்றன் மனமறிய - நாங்கள்
பஞ்சையெனப் பறந்ததுண்டோ - இந்தப்
பாரிலுள்ள தேசங்கள் இகழ்ந்ததுண்டோ?

மணிவாசகர் பதிப்பகம் 1992இல் வெளியிட்ட "பாரதிதாசன் கவிதைகள் முழுவதும்" என்ற நூலிலும் இப்பாடல் இடம் பெறவில்லை. பதிப்பாளர் பல புதிய பாடல்களை இந்நூலில் சேர்த்திருக்கிறார். என்றாலும் இப்பாடல் விடுபட்டுவிட்டது.

தங்கம்மா பாரதி, கண்ணன் என் சீடன் என்னும் பாடல் உருவான சூழலை மிக அழகாகத் தம் நூலின் பக்கங்கள் 32-35 இல் கூறியுள்ளார்.

யதுகிரி அம்மாள் தம் நூலில், விட்டு விடுதலையாம் என்று தொடங்கும் பாடல், பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார் என்று தொடங்கும் பாடல், மனதில் உறுதி வேண்டும் என்று தொடங்கும் பாடல், மூன்று காதல் என்ற பாடல், செந்தமிழ் நாடெனும் போதினிலே என்று தொடங்கும் பாடல், கரும்புத் தோட்டத்திலே என்ற தொடங்கும் பாடல், எங்ஙனம் சென்றிருந்தீர் என்று தொடங்கும் பாடல், கண்ணன் திருவடி என்று தொடங்கும் பாடல், பாரத சமுதாயம் வாழ்கவே என்ற தொடங்கும் பாடல், எங்கள் வேள்விக் கூடமீதில் என்ற தொடங்கும் பாடல், தேவர் வருக என்று தொடங்கும் பாடல், வேண்டுமடி விடுதலை என்று தொடங்கும் பாடல், இந்தத் தெய்வம் நமக்கனுகூலம் என்று தொடங்கும் பாடல் ஆகியவற்றின் தோற்றச் சூழலை விளக்கியுள்ளார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே என்று தொடங்கும் பாடல் பற்றிய விவரங்களை நாவலர் சோமசுந்தர பாரதியாரிடமிருந்து பெற்று, விஸ்வநாத ஐயர் தம்நூலில் பதிவு செய்திருக்கிறார்.

மேலும் அந்நூலில் சந்திரிகையின் கதை பற்றிய முக்கிய தகவல்களையும் தந்திருக்கிறார்.

தேவி வஸந்தானந்தா, மகாகவியின் தோத்திரப் பாடல்கள், நவராத்திரப் பாட்டு, வெள்ளைத் தாமரை என்ற தொடங்கும் பாடல், மேலும் சில பாடல்கள் தோன்றிய சூழலைத் தம் நூலில் தந்திருக்கிறார். மேலும் இந்நூலில், தாயின் மணிக்கொடி பாரீர், பாரத சமுதாயம் வாழ்கவே, வந்தே மாதரம், எங்கள் தாய் என்றுள்ள பாடல்களுக்கான ஆங்கில ஆக்கம் தரப்பட்டுள்ளது. மேலும் இந்நூலின் அடங்கிய *C. Subramania Bharati : The Artist* என்ற, வி.எஸ். குஞ்சிதபாதம் வரைந்த ஆங்கிலக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. கட்டுரை ஆசிரியரின் தந்தையாகிய கலோனியல் கல்லூரிப் பேராசிரியர் சுவாமிநாத தீட்சிதர் பாரதியாரின் நெருங்கிய நண்பர். இவரிடம் பாரதியார் தாம் அவ்வப்பொழுதும் இயற்றிய

பாடல்களைப் பாடிக்காட்டுவது வழக்கம். குஞ்சிதபாதத்தின் மகளே தேவி வஸந்தானந்தா. இக்கட்டுரையில், விவேகானந்தர் வரைந்த ராஜயோகம் என்ற அச்சுப் புத்தகத்தில் பாரதியார் பொறித்து வைத்திருந்த கையெழுத்துப் புகைப்படம் எடுக்கப்பட்டுக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியா பத்திரிகையின் மீது அன்றைய அரசு தொடுத்த வழக்கு விவரங்கள் பற்றித் தனி ஒரு நூலே வெளியிடப்பட வேண்டும். அவ்வழக்கு சம்பந்தமான நீதிமன்ற ஆவணங்கள் அனைத்தையும் சேகரித்து வைத்திருந்த சீனி. விசுவநாதன் அவற்றுக்கான தமிழாக்கத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைப் பதிவாளர் இரா. சுப்பராயலு அவர்களைக் கொண்டு செய்து வைத்துள்ளார். ஏறத்தாழ 200 பக்கங்கள் கொண்ட இம்மொழிபெயர்ப்பு சீனியாரால் வெளியிடப்படவிருக்கும் பாரதியார் பற்றிய காலவாரியாகச் சமைக்கப்பட்ட மூன்றாம் தொகுதியில் வெளிவர உள்ளது என்பதையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும்.

பாரதியார் பாடல்களுக்கான உரிமை ஒருகாலத்தில் செல்லம்மாள் பாரதி, தங்கம்மா பாரதி, சகுந்தலா பாரதி ஆகியோரால் பண்டித ஹரிஹர சர்மா, சி. விஸ்வநாத ஐயர், கே. நடராஜன் (சகுந்தலாவின் கணவர்) ஆகியோருக்கு மாற்றப்பட்டது.

அதுவரையில் பாரதியார் பாடல்கள் பாரதி ஆஸ்ரமப் பதிப்பாக வெளிவந்தன. பிறகு பாரதி பிரசுராலயம் அப்பணியை மேற்கொண்டது. சகுந்தலா பாரதியின் திருமணத்திற்குப் போதிய பணம் இல்லாத நிலையில் பாரதி பிரசுராலயத்தார் 1934 ஆகஸ்டு 4 தேதியிட்ட ஒப்பந்தத்தின்படி அக்காலத்தில் கிராமபோன் பாடல்களை வெளியிட்டுவந்த சுராஜ்மல்ஸ் அதிபருக்கு (ஜோஷிங்லால் மேத்தா) இசைத் தட்டுகளில் மகாகவியின் பாடல்களைப் பதிவு செய்யும் உரிமையை வழங்கிவிட்டனர். இதுவகையில் திருமணத்திற்குக் கிடைத்த தொகை ரூ.600/-.

இந்த உரிமையை 1946 செப்டம்பர் 10-ஆம் தேதிய ஒப்பந்தத்தின்மூலம் ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் ரூ.10,000/-க்கு பெற்றுக் கொண்டார். இதைத்தான் அவர் தமிழக அரசுக்கு 1949 ஜுன் 8 ஆம் தேதிய கொடை ஆவணத்தின் மூலம் வழங்கினார். இந்தக் கொடை ஆவணம் ஆங்கிலத்தில் உள்ளது. எனது வாழ்க்கை அனுபவங்கள் என்ற நூலில் திரு ஏ.வி.எம். செட்டியார் இந்த ஆங்கில ஒப்பந்தத்தின் நிழற்படியை

இணைத்திருக்கிறார். இவ்வாணம் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். பாரதி பாடல்களை நாட்டுடமையாக்கப்பட்டதற்கான மூல ஆதாரம் இதுவேயாகும்.

பாரதியாருக்கும், பேராசிரியர் சுந்தரம் என்பவருக்கும் இடையே சர்ச்சை நடந்தது. இந்தவிவாதம் எழுத்துமூலம் ஆங்கிலத்தில் நடந்தது. இதுபற்றிய தகவல்கள் பாரதியாரின் ஆங்கிலப் படைப்புகளில் காணக்கிடக்கின்றன என்றாலும், இன்னமும் இது பற்றி முழுவிவரம் நமக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்து ஆங்கில நாளிதழ்களில் இது குறித்த செய்திகள் வந்திருக்கின்றன.

பாரதியாரையும், பாரதிதாசனையும் இணைத்துச் சில நூல்கள் வெளிவந்திருக்கின்றன. என்றாலும், பாரதிதாசன் பாரதியாரை எங்ஙனமெல்லாம் தம்முடைய முன்னோடியாகக் கொண்டார் என்பதற்கான ஆதாரங்களைத் தொகுத்து வெளியிடல் வேண்டும்.

பாரதியாரோடு நட்புரிமையோடும், பொதுவாகவும் தொடர்வு கொண்டவர்கள் பலராவர். இதற்கென ஒரு பட்டியல் சமைத்தால் அது மிக நீண்ட பட்டியலாக இருக்கும். இவ்வன்பர்கள் பற்றிய முக்கிய தகவல்கள் பெறப்பட்டு ஒரு களஞ்சியம் வெளியிடப்பட வேண்டும்.

தங்கம்மாள் பாரதி எழுதிய பாரதியும் கவிதையும், (1947) என்ற நூலில் உள்ள சுவையான பகுதிகளைத் தொகுக்க வேண்டும். இந்நூலில் துணுக்குகள் என்ற தலைப்பு 64ஆம் பக்கத்தில் தொடங்கி 93ஆம் பக்கத்தில் முடிவுறுகிறது. மேலும் இந்நூலில், எங்கள் வேள்விக் கூட மீதும், ஆதிசிவன் பெற்றுவிட்டான், உண்ண உண்ணத் தெவிட்டாதே, மங்கியதோர் நிலவினிலே, பிள்ளைப் பிராயத்திலே, இந்த நிலையினிலே, பின்னொரு நாளினிலே, திக்குகள் எட்டுஞ் சிதறி, காற்றடிக்குது கடல் குமுறுது, பக்தியினாலே, வாராய் கவிதையாம் மணிப்பெயர்க் காதலி, மாதவன் சக்தியினை, கதைகள் சொல்லிக் கவிதை, வலிமையற்ற தோளினாய், தேவர் வருக என்று சொல்வதோ, எங்கிருந்து வருகுவதோ என்று தொடங்கும் பாரதி பாடல்கள் எச் சூழலில் தோன்றின என்பதற்கான விளக்கங்கள் உள.

சகுந்தலா பாரதியின் என் தந்தை என்ற நூலில் பலப்பல துணுக்குச் செய்திகள் உள. மேலும், பக்தியினாலே என்று தொடங்கும் பாடல் - காதற் பாடல்களில் தவறாக சேர்க்கப்பட்ட பாடல் இதன் உண்மைத் தலைப்பு காலைப் பொழுது,

கட்டுரையில் வெளியாகிய பாரதி பாடல் பூட்டைத் திறப்பது கையாலே என்று தொடங்கும் பாடல், வாகிரிக் குன்றின் சூழலே சந்திரிகை கதையில் வருணிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி, சாகா வரம் அருள்வாய் என்று தொடங்கும் பாடல், கிருஷ்ண ஜயந்தியன்று பாரதியார் வரைந்த இரண்டு சாமுண்டிப் பாடல்கள், அரவிந்தருடன் பாரதி நிகழ்த்திய வடமொழி உரையாடல் என்ற இவற்றிற்கான சூழல்வரையப்பட்டுள்ளது.

ஆ.ஜி. ரங்கநாயகியின் பாரதியார் இல்லற நாடகம் பல செய்திகளைத் தருகிறது. சிலோன் விஜயேந்திரன், பாரதி வரலாற்று நாயகர் என்ற ஒரு நூலைச் சமைத்திருக்கிறார். பாரதிதாசன் பாரதியாரைப் பற்றித் திரைப்படம் எடுக்க வரைந்த நாடகம் இப்போது நமக்குக் கிடைக்கிறது. இது மன்னர் மன்னன் எழுதிய பாட்டுப் பறவைகள் என்ற நூலில் இணைக்கப்பட்டிருக்கிறது. மலையாள அன்பர் கோபாலகிருஷ்ணன் கோட்டூர் Fire in the soul என்ற தலைப்பில் ஓர் ஆங்கில நாடகத்தை 193 பக்கங்களில் வரைந்திருக்கிறார். கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்கத் தகுதிபடைத்தவை இந்நூல்கள்.

தமிழ் அறிந்த ரஷ்யர்கள் பாரதி பற்றித் தமிழிலும் பல கட்டுரைகள் எழுதியுள்ளனர், எழுதியும் வருகின்றனர். செர்கி ஏ. பருஜ்தின், இ.பி. செலிஷேவ், எம்.எஸ். ஆந்திரனோவ், வி.ஏ. மாரெங்கோ, வி.பி. பூர்னிக்கா, எல்.வி. புச்சிக்கினா, எஸ்.ஜி. ரூதின், ஏ.எம். துபியான்ஸ்கி, ஐ. ஸ்மிர்னோவா, ஆகியோரின் கட்டுரைகளைத் தொகுத்து மகாகவி பாரதி பற்றிச் சோவியத் அறிஞர்கள் என்ற தலைப்பில் ஒரு நூல் 1982 இல் சோவியத் நாடு அலுவலகம் வெளியிட்டது. மேலும் தமிழறிந்த ரஷ்ய அறிஞர்கள் பாரதியார் பற்றி எழுதி வருகிறார்கள். இவற்றைச் சேகரிக்க வேண்டும். அடிக்கடி தமிழ்நாடு வந்துபோகும் ஏ.எம். துபியான்ஸ்கி அவர்களைக் கொண்டு இக் கட்டுரைகளைப் பெற வழிவகுக்க வேண்டும்.

பாரதியாரும், வ.வெ.சு. ஐயரும் நெருங்கிய நண்பர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள். தமிழகம் மேம்படப் பாடுபட்டவர்கள். அவரவருக்கு உகந்தமுறையில் தத்தம் பணிகளை மேற்கொண்டனர். என்றாலும், இருவருடைய அணுகுமுறைகளிலும் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பாரத மாதவுக்குச் சிலை செய்ய வேண்டும் என்று சிற்பியிடம் கூறியபோது பாரதமாதாவை ஏழைப் பெண்போன்ற

கோலத்தில் சமைக்க வேண்டும் என்றார் வ.வெ.சு. ஐயர், பாரதியார் இதனை மறுத்து, பாரதமாதா சர்வாலங்கார பூஷிதையாய்த் தோன்ற வேண்டும் என்றார். பாரதத்தை வெள்ளையர் ஆண்டாலும், பாரதத்தின் நதிகளையும், மலைகளையும், இயற்கை வளத்தையும் கொண்டு சென்று விடமுடியாது என்றார் பாரதி.

டிங்ரால் மதன்லால், கர்ஸான் வில்லி என்பவரை சுட்டுக் கொன்றார். வெள்ளை அரசாங்கம் அவருக்கு மரண தண்டனை தந்தது. அவர் சடலத்தை உரியவரிடம் கொடுக்க மறுத்துவிட்டது. இது நடந்தது இங்கிலாந்தில், சில நாள்களுக்குப் பிறகு இங்கிலாந்தில் துணிஆலை தீக்கிரையாகிவிட்டதால் பலலட்சம் இழப்பு உண்டாயிற்று. ஐயர், டிங்ரால் உடலுக்கு ஈடான தொகையை அக்னி பகவான் பெற்றுக் கொண்டு நிறைவுற்றான் என்று கூற, பாரதியார் ஐயர் கூற்றை மறுத்துச் சாடியிருக்கிறார்.

பின்னாளில், இந்தியர்களுக்குக் கட்டுப்பாடு, நற்குணங்கள் ஆகியவை வளர்ந்தபின்னரே இந்திய சுதந்திரம் பெற வேண்டும் என்ற அரவிந்தரின் கூற்றை ஏற்றார் மகாகவி. இதில் ஐயருக்கு உடன்பாடில்லை.

இருவருமே தாகூர் கதைகளை மொழிபெயர்த்தவர்கள். ஆனால் ஐயருக்கு அவலச் சுவையில் அதிக மோகம், பாரதியார் நல்லின்பமே படைப்புகள்மூலம் வெளிப்பட வேண்டும் என்ற கருத்துடையவர். வ.வெ.சு. ஐயர் கதையை ஒருபகுதி படித்த அளவிலேயே அதில் வரும் பெண் பாத்திரம் ஒன்றை ஐயர் கொல்லாமல் விடமாட்டார் என்று பாரதி கூறினார். அது அப்படியே பலித்தது. இதில் நினைவில் கொள்ள வேண்டிய செய்தி ஒன்றுண்டு. அதாவது மகாகவி ஐயரைப் பெரிதும் மதித்தவர். ஆகவே கண்ணன் பாட்டுக்கு ஐயரைக் கொண்டே அணிந்துரை வரையச் செய்தார்.

சிறைத் தண்டனையுற்ற ஐயர் சென்னையிலிருந்து பெல்லாரி சிறைக்க அழைத்துச் செல்லப்படும்போது, கூடவந்த போலீசாரின் இசைவு பெற்று ஓர் இரவில் பாரதியைக் காண வருகிறார். பாரதியைக் கண்ட பிறகே ஐயர் சிறைக்கு இட்டுச் செல்லப்படுகிறார். ஐயர் மகாகவியைப் பார்த்த இரவின் பிற்பகுதியில் பாரதியார் மரணம் எய்துகிறார். இவர்களுக்கிடையே இருந்த மன ஒற்றுமை, வேற்றுமைகளை ஆய்ந்து நீண்டதொரு கட்டுரை வரையப்படவேண்டும்.

பாரதியார் பற்றி வரையப்பட்ட நூல்களில் பலப்பல பிழைகள் புகுந்துவிட்டன. உற்சாகம் கற்பனையோடு இணையும் போது உண்மை பலியாகிவிடுகிறது. மடிந்தாலும் பொய் கூறேன் என்றார் மகாகவி. அவரைப்பற்றிய நூல்களில் பொய்யின் நிழல்கூட விழக்கூடாது.

பாரதி ஆய்வின் பிதாமகர் ஆர்.எ. பத்மநாபன் அவர்களே, அவரே பல ஆய்வாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கான ஆகரம் என்பேன், பாரதி உலகம் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. என்றாலும், அவரே பல தவறுகளுக்கு இடம் கொடுத்துவிட்டார்.

சென்னையில் ஒரு கூட்டத்தில நான் பேசும்போது, "If so great an authority as R.A. Padmanabhan is found to err, others are bound to err" என்று கூறியிருக்கிறேன். `The new spirit of India' என்றொரு நூல் 1908ல் வெளிவந்தது. இதன் ஆசிரியர் H.W. நெவின்சன். இவர் இந்தியாவில் தங்கி இந்நாட்டு நிலைமை பற்றி இந்நூலுள் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பாரதி பங்குகொண்ட கடற்கரைக் கூட்டத்தில் இவரும் கலந்து கொண்டிருக்கிறார். இதை On the Beach என்ற தலைப்புள்ள ஆறாம் அத்தியாயத்தில் எழுதியிருக்கிறார். இந்நூலைத் தேடிக் கண்டுபிடித்து, பத்மநாபன் அவர்கள் கடல்மணலில் ஒரு கூட்டம் என்று ஒரு கட்டுரையைத்தம் சித்திர பாரதியில் வரந்திருக்கிறார். நெவின்சன் கட்டுரையையும், பத்மநாபன் கட்டுரையையும் ஒத்துப் பார்க்கும் போது சிலசில மாற்றங்கள் தென்படுகின்றன. மொழி பெயர்க்கும்போது மூலத்தில் உள்ளவாறே செய்தி கொடுக்கப்பட வேண்டும் என்பது என் கருத்து.

பல அருமையான தகவல்களைத் தந்திருக்கும் ரா. அ. பத்மநாபன் சில இடங்களில் பிழைபட்ட கருத்துக்களைக் கூறி இருக்கிறார். சிலவற்றைச் சீனி. விசுவநாதன் எடுத்துக் காட்டியபோது அவர் மீது இவர் கோபம் கொண்டாரே ஒழியச்சமாதானம் கூற முனையவில்லை.

பத்மநாபன் அவர்கள் செய்த பிழைகளைப் பெரும்பாலும் தொகுத்துச் சீனி. விசுவநாதன், பாரதி ஆய்வுகள் - சில சிக்கல்கள் என்னும் தலைப்பில் ஒரு நூல் வரைந்திருக்கிறார். நடுவுநிலைமையோடு ஆய்வு செய்வோருக்குப் பெரிதும் பயன்படும் நூலாக இது திகழ்கிறது.

வெளிவந்திருக்கும் பாரதி ஆய்வுகளை முறையாகப் பரிசீலித்துப் பிழைகளைச் சுட்டிக்காட்டி ஒரு நூல் வரையப்பட வேண்டும்.

அந்நூல் ஆதார பூர்வமாக அமைய வேண்டும். சிறிய பிழைகளைக் கூடச் சுட்டிக்காட்டுவதில் தவறில்லை. களையெடுப்பது நிகழாவிட்டால் விளையும் பயிர் நல்ல பலன்தராது.

மகாகவி அசைக்க முடியாத தெய்வபக்தி உடையவர் என்பதை இந்த நாடு அறியும். என்றாலும் இப்படிப் பட்ட பக்தி தம்முள் வேர் விடுவதற்கு முன்பு அவர் தம் பாட்டனாருடன் நாத்திக வாதத்தில் ஈடுபட்டு அப்பெரியவரை வென்றிருக்கிறார்.

சிந்திப்பதிலும், விவாதிப்பதிலும் மகாகவி வல்லவர், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனவே அவர் மேற்கொண்ட மார்க்கங்கள், அதற்காக அவர் உற்ற இன்னல்கள் ஏராளம். அவர் ஜாதிபிரஷ்டம் செய்யப்பட்டார் என்ற செய்தியை ஒரு சிலரே அறிவர். இதுபற்றிச் சகுந்தலா பாரதி கூறுவதாவது: ஜாதியைவிட்டு விலக்கியதைப்பற்றி என் தந்தைக்குச் சிறிதுகூட வருத்தமில்லை (என் தந்தை- பக்கம் 69).

சகுந்தலா பாரதி ஐந்து வயதில் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அக்குழந்தை பூரணசுகம் பெறுவதற்காக மகாகவி பாடியபாட்டு பக்தியினாலே என்று தொடங்கும் பாடலாகும். கடுமையான வறுமையில் பாரதியார் வாடியபோது ஒரு தீபாவளிக்கு முன்தினம் தெய்வானுகூலத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று என் தந்தை என்னும் நூலின் பக்கம் 16இல் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதன் சாரம் வருமாறு.

தீபாவளிக்கு முதல் நாள் துணிக்கடை நண்பர் ஒருவர் பாரதியாருக்கும் அவர் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் வேண்டிய துணிகளைக் கொடுத்துவிட்டுப் போகிறார். சீடர்கள் பலர் பட்டாசு, மத்தாப்பு, வாணங்கள், பூ, வெற்றிலை, பழங்கள் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகின்றனர். இரவு எல்லோரும் தூங்கப் போய்விட்டபோது, பாரதிமட்டும் அமைதியின்றிச் சிந்தனையோடு அமர்ந்திருக்கின்றார்.

நடுநிசியில் இரண்டு நண்பர்கள் வந்து கதவைத் தட்டவும், பாரதியார் கதவைத் திறக்கிறார். ஒருவர் ஓரணா, இரண்டணா காசுகளாகச்சிறிய பணமுடிப்பைப் பாரதியார் பாதத்தில் வைத்து வணங்குகிறார். கனவில் பராசக்தி தோன்றி, அடே உத்திராபதி எழுந்திரு. என் பக்தன் பாரதி நாளைக் காலை தன்னைக் காணவரும் ஏவலர், தொழிலாளர் நண்பர்களுக்குப் பரிசளிக்கக் கையில் காசில்லாமல் நொந்து மனம் வருந்துகிறான். உடனே

கையிலுள்ள பணத்தைச் சில்லறையாக மாற்றிக்கொண்டு போய்க்கொடு என்று சொன்னாள், நான் அதை நிறைவேற்றினேன் என்கிறார். இது ஒரு அதிசயம்.

இதேபோன்று, பாரதியாரின் புதுவை நண்பரான ஸ்ரீ பொன்னு முருகேசப் பிள்ளையின் மூத்த குமாரரான ஸ்ரீ ராஜா பாதர் மேல்படிப்புக்குப் பிரான்சுக்குப் போனார். படிப்பு முடிந்து திரும்பும்போது கப்பல் உடைந்து விட்டதாகத் தகவல் வந்தது. முருகேச பிள்ளை துடிதுடித்துப் போனார். கப்பல் உடைய வில்லை என்று உறவினர்கள் பொய்த்தந்தி தயாரித்துக் காட்டினார்கள். பிள்ளை நம்பவில்லை, பாரதியார் சொன்னால்தான் நம்புவேன் என்றார். பாதியார், கப்பலே கவிழ்ந்தாலும் பராசக்தி அருளால் நம் ராஜாபாதருக்கு ஒரு கெடுதலும் நேராது. அதற்கு நான் ஜவாப்தாரி என்று தேறுதல் கூறினார். அதிர்ச்சியால் ஏற்பட்ட நரம்புத் தளர்ச்சியால் சிறிது நாளைக்குள் ஸ்ரீ முருகேச பிள்ளை உயிர்துறந்தார். பாதி வாக்குப்பொய்த்துப் போகவில்லை. கப்பல் உடைந்தபோதும், உயிர்தப்பி ஸ்ரீ ராஜாபாதர் நலமோடு புதுவை வந்து சேர்ந்தார். பாரதியாரின் வாக்கைப் பராசக்தி காப்பாற்றி விட்டாள். இத்தகவலும் சகுந்தலா பாரதி கூறிய தகவலேயாகும்.

புதுவையில் ஒரு சித்தர் இருந்தார். யானைக் கால் வியாதி அவருக்கு இருந்தது. பாரதியார் பெருமையை அறிந்த அவர் ஒரு சமயம் பாரதியார் திருவடிகளில் விழுந்து வணங்கினார். பாரதியாருக்கு அருவருப்பு. யார் தம்மைப்பற்றி அறிமுகம் செய்தது என்று கேட்டார். குவளைக் கண்ணன்தான் என்ற பதில் கிடைத்தது. உடனே வேகமாக வீட்டுக்குச் சென்று, குவளைக் கண்ணன்மீது சுடுசொற்களை வீசினார். கண்ட கண்ட நோயாளிகள் எல்லாம் என்னைத் தொடும்படி செய்கிறாயே என்று சினந்தார். குவளை கிருஷ்ணமாச்சாரியாருக்குப் புரிந்துவிட்டது. அவர், பாரதி உன் காலில் கோவிந்தசாமி விழுந்து வணங்கினாரா? ஆச்சர்யம், ஆச்சர்யம். சிறிது காலம் பொறு. நீ அவருடைய திருவடிகளில் வீழ்வாய் என்றார். பாரதி அதிர்ச்சியுற்றார்.

சில நாள் கழித்துப் பாரதியின் வீட்டிற்கு இச் சித்தபுருஷர் வந்தார். வரும்போதே பாரதியாரின் தந்தை உருவத்தைத் தம்மேனியில் தாங்கிவந்தார். பாரதி அச்சம் கலந்த அற்புத அனுபவம் பெற்றார். தந்தை தரிசனம் கிடைத்த பாரதியிடம், பாரதி, மேலும் என்ன காண வேண்டும்? என்று சித்தர் கேட்டார். பாரதிக்குத் தம் இளவயதிலேயே மறைந்துவிட்ட தாய் முகம் காண ஆசை,

அதை வேண்டுகிறார் உன் தாயைப் பார் என்று சொல்லிய அச்சித்தபுருஷர் அப் புண்ணியவதியின் திருக்கோலத்தைக் காட்டி அருளினார். பாரதியே தம் வாழ்க்கை வரலாறான பாரதி அறுபத்தாறில் இதனைப் புகல்கிறார்.

இத்தகைய அற்புத நிகழ்சசிகள் பல பாரதியார் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளன. இவற்றைப்பற்றி ஆன்மீக ஆய்வு நிகழ்த்தலாம். இவற்றைத் தொகுத்துத் தனியொரு நூலாக வெளியிடல் வேண்டும்.

பாரதி ஒரு கடல், வேண்டுவோருக்கு வேண்டுவன எல்லாம் அங்குக் கிடைக்கும். ஆய்வுக்கு மட்டும் அவர் பஞ்சமா வைக்கப்போகிறார்? பாரதியை அணுகுவதற்கு நாம் சமைவாய் இருந்தால் பாரதி நம்மை முன்வந்து வரவேற்றுச் சிந்தை துலங்கச் செய்வார்.

இணைப்பு : 1

மாதிரிப் புதிர் வினா - விடை

கோடிட்ட பகுதிகளை நிறைவு செய்க:

1. இறந்த மாண்பு தீரமிக்க ஏழ்மை கொண்டபோழ்தினும் அறம் தளர்கிலாது நிற்கும்.................................

   (அன்னை வெற்றி கொள்கவே)

2. வல்ல சொல்கெடாது காப்பாள்.................................

   (வாழியன்னை வாழியே)

3. திண்ணம் காணீர் பச்சை வண்ணன்.................................

   (பாதத்தானை)

4. காந்தி சொற்கேட்டார், காண்பார்.................................

   (விடுதலை கணத்தினுள்ளே)

5. விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி.................................

   (வேண்டியவாறுனைப் பாடுதுங் காணாய்)

6. பரிமிசையூர்வாளல்லள் பாரனைத்தும் அஞ்சும்.................................

   (அரிமிசையே ஊர்வாள் அவள்)

7. செய்த தருமமே யென்று ஒலிசெய் முத்தி தரும்வேத முரசு................................. வேதங்கூறியது என்ன?

   (சத்யம் வத தர்மம் சர)

8. நதிமேற்கிலிருந்து கிழக்கே பாயும், நதம் கிழக்கிலிருந்து மேற்கே பாயும். ஆனால் ஒரு நதத்தை நதி என்று பாரதியார் குறிப்பிட்டார். அது எது?

   (சிந்து நதி)

9. பஞ்ச நதம் என்று பாரதியார் கூறுகிறார், அவை எவை?
(ஜீலம், சீனாப், ரவி, பியாஸ், ஸட்லஜ்)

10. எப்போதும் கைகாட்டுவார்.................................. இவர்
(யாரிடத்தும் பூனைபோல் ஏங்கி நடப்பார்)

11. இவர்................................. பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார். இம்மக்கள் வாழும்நாடு எத்தகைத்து என்கிறார் மகாகவி?
(புண்ணிய நாடு)